# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION




மார்ச்சு—1963



A. R. C. பள்ளிகளின் நிர்வாகி
திரு, K. இராமய்ய செட்டியார்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94–95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

# ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBAKKALVI" OFFICE

**94-95, New Street, Mannady, Madras-1**

**POST BOX No. 1818.** **PHONE NO. 24544.**


★

## "ஆரம்பக் கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் எமது "**திரு. வி. க. தமிழ் வாசகங்களை**" அல்லது "**வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை**" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 100-க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், ஆரம்பப் பாடசாலைகளுக்கு "**ஆரம்பக் கல்வி**" மாதப் பத்திரிகை இனாமாக மாதா மாதம் அனுப்பி வைக்கப்படும்.

**ஆரம்பப் பள்ளிகளுக்கான எமது வெளியீடுகள் :**

# திரு. வி. க. தமிழ் வாசகங்கள்

**ஆசிரியர் :**

**பி. வீரராகவன்**

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 5 | 0 | 3 | 28-5-'58 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 6 | 0 | 3 | 28-5-'58 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 3 | 28-5-'58 |
| நான்காம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13-5-'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 0 | 0 | 11 | 18-5-'60 |

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER "ARAMBAKKALVI"

### *FORM IV*

(See Rule 8)

1. Place of Publication..............Madras.
2. Periodicity of its publication...Monthly.
3. Printer's Name....................P. Veeraraghavan.
   Nationality..............Indian.
   Address..............94/95, New Street, Mannady, Madras.-1.
4. Publisher's Name...........P.Veeraraghavan.
   Nationality..............Indian.
   Address................94/95, New St., Mannady, Madras -1.
5. Editor's Name..............P. Veeraraghavan.
   Nationality.................Indian.
   Address.............94/95, New St., Mannady, Madras-1.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total share capital. — P. Veeraraghavan, 94-95, New St.,Mannady, Madras-1.

I, P. VEERARAGHAVAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd) P. VEERARAGHAVAN,
*Publisher*,
"Arambakkalvi."

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்

முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா

மலர் 25 } மார்ச் 1963 { இதழ் 3


## சட்டமன்றத்தில் ஆரம்பக்கல்வி

ஒரு வீட்டில் உள்ள பொருள்கள் பாதுகாப்பான முறையில் இருக்க வேண்டுமானால் அந்த வீட்டிற்கு ஒரு கதவும் அந்தக் கதவுக்கு ஒரு தாழ்ப்பாளும் இருந்தாகவேண்டும்.

ஆற்றில் ஓடும் தண்ணீர் நேரான திசையில் ஒழுங்கான முறையில் செல்ல வேண்டுமானால் ஆற்றிற்கு இரு கரைகள் இருந்தாக வேண்டும்.

வண்டியில் பூட்டப்பட்டுள்ள மாடு செல்ல வேண்டிய பாதையில் செல்லவேண்டிய முறைப்படிச் செல்லவேண்டுமானால் அதற்கு ஒரு மூக்கணாங்கயிறு போடப்பட்டிருக்க வேண்டும்.

வீதியில் போகிற கார் தாறுமாறாகச் சென்று தவறான விளைவுகளை ஏற்படுத்தாமல் இருக்கவேண்டுமானால் அதற்கு ஒரு 'பிரேக்' இருந்து தீரவேண்டும்.

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER "ARAMBAKKALVI"

CONNEMARA PUBLIC LIBRARY 30 MAR 1963 MADRAS

*FORM IV*

(See Rule 8)

1. Place of Publication..............Madras.
2. Periodicity of its publication...Monthly.
3. Printer's Name.....................P. Veeraraghavan.
   Nationality..............Indian.
   Address...............94/95, New Street, Mannady, Madras -1.
4. Publisher's Name............P.Veeraraghavan.
   Nationality...............Indian.
   Address.................94/95, New St., Mannady, Madras -1.
5. Editor's Name..............P. Veeraraghavan.
   Nationality..................Indian.
   Address..............94/95, New St., Mannady, Madras-1.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total share capital. — P. Veeraraghavan, 94-95, New St.,Mannady, Madras-1.

I, P. VEERARAGHAVAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd) P. VEERARAGHAVAN,
*Publisher,*
"Arambakkalvi."

ஆடி அசைந்தபடி ஆநந்தபவனி வருகிற தேர் அப் பக்கமோ இப் பக்கமோ சாய்ந்து அருகில் உள்ள கட்டிடங்களுக்குச் சேதம் விளைவிக்காமல் இருக்க வேண்டுமானால் அதற்கு முட்டுக்கட்டை போடப்படவேண்டும்.

இவற்றையெல்லாம் போலத்தான், ஜனநாயகக் கோட்பாட்டின் படி இயங்கிவருகிற ஒரு நாட்டின் அரசாங்கம் தவறுகளையும் கொடுமைகளையும் இழைக்காமல் இருக்க வேண்டுமானால் அந்த நாட்டின் சட்டமன்றத்தில் பலம் பொருந்திய எதிர்க்கட்சி ஒன்று இருந்தாகவேண்டும்.

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள கட்சியினர், செய்யக்கூடாத செயல்களைச் செய்யும்போது, இந்தப் போக்கு ஆகாது என்று இடித்துக்கூறி அவர்களைத் தடுத்து நிறுத்துகிற தலைசிறந்த பணியைப் புரிவதற்கு எதிர்க்கட்சி தேவைப்படுகிறது.

அதுபோலவே, ஆளும் கட்சியினர், செய்யவேண்டிய செயல்களைச் செய்யாமல் வீணே பொழுதைக் கடத்திக்கொண்டிருக்கும் போது, "நாடு வாழவும் கேடு தீரவும் இன்னின்ன செயல்கள் இன்றியமையாதன ஆயிற்றே! ஏன் அவற்றை இன்னமும் செய்திடவில்லை?" என்று உரத்த குரலில் அதட்டிக் கேட்பதற்கும் எதிர்க்கட்சி தேவை.

ஆற்றல்மிக்க எதிர்க்கட்சி ஒன்று சட்டமன்றத்தில் திட்டவட்டமான முறையில் பணியாற்றிக்கொண்டிருந்தால்தான், "நாம் செய்கிற அத்தனைச் செயல்களையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது அந்தக் கட்சி; நாம் ஏதாவது தவறுகளை இழைத்து விட்டால் ஊரார் முன் நம்மை அம்பலப்படுத்திவிடும் அந்தக் கட்சி; ஆகவே, நாம் மிகுந்த விழிப்போடு பணியாற்றவேண்டும்" என்ற அச்ச உணர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் ஆளும் கட்சியினருக்கு உண்டாகும்.

ஏதேனும் ஒரு ஜனநாயக நாட்டில் பலம் பொருந்திய எதிர்க்கட்சி இல்லாமல் ஆற்றல் மிக்க ஆளும்கட்சி மட்டும் இருக்குமானால், அந்த நாடு, பிரேக் இல்லாமல் ஸ்டீரிங் மட்டும் இருக்கிற மோட்டார் காரில் பயணம்செய்கிற மனிதர்களைப்போல மிக்க ஆபத்தான கட்டத்தில் சிக்கித் தவிக்கிறது என்றே பொருள்.

இந்த மிக முக்கியமான உண்மையை மிக நன்றாக அறிந்திருக்கிற காரணத்தால்தான் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியின் அமைச்சர்களுக்கு உள்ள அதே அளவு மதிப்பை மரியாதையை செல்வாக்கை எதிர்க்கட்சித் தலைவருக்குத் தந்திருக்கிறார்கள். அது

மட்டுமல்ல. அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும் எந்த அளவு மாத ஊதியம் வழங்கப்படுகிறதோ அதே அளவு ஊதியம் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அங்கே வழங்கப்படுகிறது.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்."

என்று தெள்ளுதமிழ்ச் சொற்களால் வள்ளுவப் பெருந்தகை யார் நம் நெஞ்சையெல்லாம் அள்ளிக்கொள்ளத்தக்க வகையில் ஏறத்தாழ இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னர் எடுத்துக் கூறியிருப்பதும் இதே கருத்தை அடிப்படையாக வைத்துத்தான்.

"தான் செய்கிற தவறுகளை இடித்துக் கூறித் தன்னை நல்வழியில் செலுத்தக்கூடிய அறிஞர் பெருமக்களைத் தன் அருகில் வைத்திராத அரசன், அவனை அழிப்பதற்கு என்று வேறு பகையரசர்கள் படையெடுத்து வராவிட்டாலும்கூட, அவன் செய்கிற தவறுகளாலேயே அழிந்துபோவான்" என்று திருவள்ளுவர் தெரிவித்துள்ள இந்தக் கருத்து, அந்தக் காலத்து மன்னராட்சி முறைக்கு மட்டுமல்ல இந்தக் காலத்து மக்களாட்சி முறைக்கும் மிக மிகப் பொருத்தமாகவே அமைந்துள்ளது.

ஜனநாயக ஆட்சி முறையில் எதிர்க்கட்சிக்கு உள்ள சிறப்பான இடத்தையும் தலையாய பணியையும் தெளிவாக உணர்ந்த காரணத்தால்தான், சென்ற ஆண்டில் தமிழ்நாட்டில் பொதுத்தேர்தல் நடைபெற இருந்த நேரத்தில், "இந்தப் பொதுத் தேர்தலின் விளைவாகத் தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் ஆற்றல்மிக்க ஓர் எதிர்க்கட்சி உருவாகவேண்டும். அப்படி உருவாவதற்கு ஏற்ற வகையில் ஆசிரியப் பெருமக்களும் பள்ளி நிர்வாகிகளும் தங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்" என்று நாம் "ஆரம்பக் கல்வி" வாயிலாக வேண்டுகோள் விடுத்திருந்தோம். நாம் மட்டுமல்ல, நாட்டின் நலனில் நாட்டம்கொண்டிருந்த அறிஞர் பெருமக்கள் பலரும் இதே வகையான கருத்தை அச்சமயம் வெளியிட்டிருந்தனர்.

தேர்தல் நடந்து முடிந்தபின்னர் அதன் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது, நாம் தெரிவித்த வேண்டுகோள் சிறப்பான அளவில் நிறைவேறியிருக்கிறது என்கிற மகிழ்ச்சி நம் உள்ளத்தை முற்றுகையிட்டது. ஆம்! பலம்பொருந்திய ஓர் எதிர்க் கட்சி— திராவிட முன்னேற்றக் கழகம்— ஐம்பது இடங்களைக் கொண்டதாகத் தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் வந்து அமர்ந்தது.

வன்மை மிக்க ஓர் எதிர்க்கட்சி தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் வந்து அமர்ந்த காரணத்தால், இந்த ஓராண்டுக் காலமாக, அச்சட்ட

மன்றம், இதற்கு முன் இல்லாத அளவு விறுவிறுப்பும் உயிரோட்டமும் நிறைந்ததாகக் காட்சி தந்து வருகிறது. சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிற ஒவ்வொரு நாளிலும், இன்னின்ன தவறுகளை ஏன் இழைத்தீர்கள் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சரமாரியாகக் கேள்விக் கணைகள் தொடுப்பதையும், அந்தக் கணைகளைத் தாங்கிக் கொண்டு அமைச்சர் பெருமக்கள் ஏதேதோ சமாதான வார்த்தைகள் கூறுவதையும், ஆறுதல் மொழிகள் கூறினால் மட்டும் போதாது—தவறுகளைத் திருத்திக்கொள்ள உடனடியாகத் திட்டம் தீட்டியாக வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் இடித்துரைப்பதையும், இன்னின்ன ஏற்பாடுகள் இத்தனை நாட்களில் தயாராகிவிடும் என்று அமைச்சர்கள் விடையுரை பகல்வதையும் நாம் பார்த்து வருகிறோம்.

பொதுவாகச் சென்ற ஓராண்டுக் காலமாகவே இத்தகைய விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் சட்டமன்றத்தில் காணப்பட்டு வருகின்றன என்றாலும் சிறப்பாகச் சென்ற ஒரு மாத காலமாக அங்கு நடைபெற்று வருகிற வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதங்கள் பெரிதும் பாராட்டிப் புகழத்தக்க அளவில் அமைந்துள்ளன.

இந்த ஒரு மாத காலத்தில், நாட்டு மக்களின் வாட்டத்தைப் பெருக்கி வருகிற பல்வேறு பிரச்சினைகளைச் சூடும் சுவையும் நிரம்பிய முறையில் சட்டமன்றத்தில் அலசி ஆராய்ந்து எடுத்துக் காட்டி வருகிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், சிறப்பாகவும் குறிப்பாகவும் ஆரம்பக் கல்வி பற்றிய பல சிக்கல்களை அமைச்சர்களின் கவனத்தை இழுக்கத்தக்க வகைகளில் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், அதே கட்சியைச் சார்ந்த திருவாளர்கள் காஞ்சி. மணிமொழியார், கே. ஏ. மதியழகன், வி. கிருட்டின மூர்த்தி, புலவர் கோவிந்தன், அன்பில் தர்மலிங்கம் முதலிய பல உறுப்பினர்களும், ஆரம்ப ஆசிரியர்களையும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளையும் வாட்டி வதைத்து வருகிற பல்வேறு துயரங்களையும் தொல்லைகளையும் இடையூறுகளையும் சிக்கல்களையும் ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துரைத்து விளக்கியிருக்கிறார்கள். அரசாங்கத்தார் இந்தச் சிக்கல்கள் யாவற்றையும் ஆற அமர இருந்து ஆராய்ந்து தேவையான பரிகாரங்களை விரைவில் மேற்கொண்டாக வேண்டும் என்றும் வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். கல்வி மானியக் கோரிக்கையின் போது மட்டுமல்லாமல் வரவு செலவுத் திட்ட அறிக்கை பற்றிய பொது விவாதத்தின் போதும் திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கல்விப் பிரச்சினைகளை விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் திட்டமாகவும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசியிருக்கிற அளவுக்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள், கல்விப் பிரச்சினைகளை விளக்கிப்

பேசக் காணோம்; இந்தத் துறையில் அரசாங்கத்தார் செய்யத் தவறிய செயல்களைச் சுட்டிக் காட்டி உரையாற்றவும் காணோம். நம்முடைய கட்சி ஆளும் கட்சியாக இருப்பதால் ஆட்சியாளர்களின் குறைகளை நாமே சுட்டிக் காட்டுவது நன்றாயிராது என்கிற 'தாட்சண்யம்' காரணமாக அவர்கள் அதிகமாகப் பேசாமல் வாளா இருந்திருக்கக் கூடும். அவர்களுடைய போக்குக்குக் காரணம் எதுவாக இருந்தாலும், அரசாங்கத்தின் செயல்களையும் திட்டங்களையும், அவற்றில் உள்ள குறைகளையும் குற்றங்களையும், அக் குற்றம்குறைகளால் விளையக்கூடிய அழிவையும் இழிவையும், அவற்றை யெல்லாம் போக்குவதற்கு உரிய முறைகளையும் வகைகளையும் வன்மையாகவும் திண்மையாகவும் எடுத்துக்காட்டக்கூடிய வாய்ப்பும் வசதியும் எதிர்க்கட்சியினருக்கே மிகுந்த அளவில் இருக்கிறது என்பது தெளிவாக விளங்குகிறது அல்லவா?

பலம் பொருந்திய எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர்களும் நிர்வாகிகளும் தங்கள் வாக்குகளை அளித்திட வேண்டும் என்று பொதுத் தேர்தலுக்கு முன்னால் நாம் விடுத்த வேண்டுகோளின் நியாயத்தை அப்போது உணர மறுத்த ஒரு சிலர்கூட, நம்முடைய கருத்து முற்றிலும் நியாயமானதுதான் என்பதை, சட்டமன்றத்தின் இந்த ஓராண்டு நிகழ்ச்சிகளைக் கவனித்துள்ள இன்றைய நிலையில் தவறாமல் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

"தனியார் துறையில் நடைபெறும் ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 10 சத விகித அளவுக்கு மேற்படாத ஒரு தொகையே நிர்வாகச் செலவிற்காக வழங்கப்படுகிறது. 5 ஆசிரியர்களைக் கொண்ட ஓர் ஆரம்பப் பள்ளிக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 35—க்கு மேற்படாத ஒரு தொகையையே நிர்வாகச் செலவாக அரசாங்கம் அனுமதிக்கிறது. ஆனால் நிர்வாகச் செலவோ மாதந்தோறும் ரூ. 175-க்கு மேல் ஆகிறது. ஆகவே நிர்வாக உதவித் தொகையை 10 சத விகிதம் என்பதை 20 சத விகிதமாக உயர்த்தவேண்டும்."

இந்த வார்த்தைகளைச் சட்டமன்றத்தில் எடுத்துக் கூறியிருப்பவர், சென்னை தியாகராயநகர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும் நம் கெழுதகை நண்பரும் ஆகிய **காஞ்சி மணிமொழியார் அவர்கள்** ஆகும். இந்தக் கருத்துரை முற்றிலும் நியாயமானது என்பதை யார் மறுக்கமுடியும்? ஐந்து ஆசிரியர்களைக் கொண்ட ஓர் ஆரம்பப் பள்ளிக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 35 மட்டுமே நிர்வாக உதவித் தொகையாக அரசினரால் வழங்கப்பட்டால், அந்தச் சிறு தொகையை வைத்துக் கொண்டு பள்ளிக்கூட நிர்வாகி, பள்ளிக்

கூடத்தை நடத்துவதற்குத் தேவையான எல்லாச் செலவுகளையும் எப்படித்தான் சரிக்கட்டமுடியும்?

பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கான வாடகை,

கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்கும் சுண்ணும்பு அடிப்பதற்கும் ஆகும் செலவு,

கல்விப் பயிற்சிக்குத் தேவையான நாட்டுப் படங்கள், விளக்கப் படங்கள், வெண்சுண்ணத் துண்டுகள், அழிக்கும் துணி, முதலியவற்றை வாங்குவதற்கு ஆகும் செலவு,

மேசை, நாற்காலி, விசுப்பலகை, கரும்பலகை முதலியவற்றை வாங்கவும் பழுதுபார்க்கவும் ஆகும் செலவு,

சிறு பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்துவரும் ஆயாக்களுக்கு ஊதியம்,

பள்ளிக் கட்டிடத்தைப் பெருக்கித் துப்புரவு செய்யும் வேலைக்காரிக்கு ஊதியம்,

தோட்டி-பியூன் ஆகியோருக்கான ஊதியம்,

தபால் செலவு,

கணக்குப் புத்தகங்கள், பென்சில், தாள், முதலிய எழுதுபொருள் செலவு,

குடியரசுத் திருநாள், பெற்ருேர் விழா முதலிய விழாக்களுக்கான செலவு,

ஆசிரியர் நல்வாழ்வு நிதிக்கு நிர்வாகிகள் செலுத்த வேண்டிய பங்கு,

ஆகிய இத்தனைச் செலவுகளையும் மாதம் ஒன்றிற்குத் தரப்படுகிற முப்பத்தைந்து ரூபாய்களைக் கொண்டே நிறைவேற்றமுடியுமா? மற்ற செலவுகளெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். கட்டிட வாடகை ஒன்றிற்கு மட்டுமாவது பற்றுமா? அந்த முப்பத்தைந்து ரூபாய்? ஐந்து வகுப்புகளை நடத்துவதற்குத் தேவையான ஒரு கட்டிடம், நூறு ரூபாய் அல்லது எண்பது ரூபாய்க்குக் குறைந்த வாடகையில் இந்தக் காலத்தில் எந்த நகரத்திலாவது கிடைக்குமா? அரசாங்கம் அளிக்கிற தொகை கட்டிட வாடகையில் பாதி அளவுதான் இருக்கும் என்ருல் மிச்சமுள்ள பாதி வாடகையை எப்படிச் செலுத்துவது? ஏனைய செலவுகளுக்குத் தேவையான பணத்தை நிர்வாகி எப்படித் திரட்டுவது? இந்த உண்மைகளையெல்லாம்

எண்ணிப்பார்த்தால், நிர்வாக உதவித் தொகையைக் குறைந்தது 20 சத விகிதமாக உயர்த்த வேண்டும் என்று திருவாளர் காஞ்சி மணிமொழியார் எம். எல். ஏ. அவர்கள் தெரிவித்துள்ள கருத்து, உடனடியாக அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒன்று என்பதை யாரும் மறுக்கமுடியாது.

"எஸ்.எஸ். எல்.சி. பொதுத்தேர்வில் அரசாங்கப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் 37 சத விகிதம் பேர் தேர்வு பெற்றனர் என்றும், தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் 55 சத விகிதம் பேர் தேர்வு பெற்றனர் என்றும் கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் விடை அளிக்கையில் தெரிவித்துள்ளார். அரசாங்கப் பள்ளிகளில் ஏன் இந்த அவல நிலை?"

என்று செய்யாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகிய **புலவர் கோவிந்தன் எம். ஏ. அவர்கள்** சட்டமன்றத்தில் கேட்டுள்ளார்கள். புலவர் கோவிந்தன் கேட்டுள்ளதைப் போல ஏன் இந்த அவல நிலை? அரசாங்கப் பள்ளிகளைவிடத் தனியார் பள்ளிகளில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் தான் உயர்ந்ததாக இருக்கிறது என்கிற உண்மையைத்தானே அமைச்சர் அளித்துள்ள புள்ளி விவரம் எடுத்துக்காட்டுகிறது? அப்படியானால் தனியார் பள்ளிகளுக்கு மேலும் மேலும் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி, அப்பள்ளி நிர்வாகிகளுக்குத் தேவையான பண உதவியையும் பிற உதவிகளையும் போதுமான அளவு அளிக்க வேண்டியது அல்லவா அரசாங்கத்தின் கடமை? ஆனால் அதற்கு மாறாகத் தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கு மேலும் மேலும் தொல்லைகளை அளிக்கத்தக்க வகையில் அரசாங்க ஆணைகள் இருப்பதற்குக் காரணம் என்ன? இப்படி இருக்குமானால் அரசாங்கப் போக்கு, எப்படி உயரும் கல்வியின் தரம் இந் நாட்டில்? கேட்கிறார் புலவர் கோவிந்தன் சட்ட மன்றத்தில். கேட்கத்தானே வேண்டும்? கேட்பதுதானே நியாயம்!

"ஆரம்பப் பள்ளிகளில் 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் இருக்கவேண்டும் என்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை இருந்தால் மற்றோர் ஆசிரியரை நியமித்துக்கொள்ளலாம் என்றும் முன்னர் இருந்த உத்தரவு தெரிவித்தது. ஆனால் இப்பொழுதோ, 70 மாணவர்கள் வந்தால்தான் மற்றோர் ஆசிரியரை ஏற்படுத்தலாம் என்கிற வகையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த உத்தரவின் விளைவாக 69 மாணவர்கள் இருந்தால்கூட ஒரே ஆசிரியர்தான் இருக்க வேண்டும் என்கிற நிலை உருவாகிறது. இந்நிலையில் ஓர் ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய கருத்துக்களை முறையாகக் கற்பிக்க இயலாது. மாணவர்களைத் தனித்தனியே மனத்தில் வைத்து, அவர்களின்

தனித்தனிக் குறைபாடுகளை அறிந்து, அவற்றைப் போக்க எவ்வகை முயற்சியும் ஆசிரியரால் மேற் கொள்ள முடியாது ''

சட்டமன்றத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமாகிய **திருவாளர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள்** ஆற்றியுள்ள உரையின் ஒரு பகுதி இது. ஆசிரியர் மாணவர் விகிதம் பற்றி அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள புதிய ஆணையின் விளைவாகக் கல்வியின் தரம் எந்த அளவுக்குத் தாழ்ந்து விடும் என்பதை இதை விடத் தெளிவாக எப்படி விளக்கிக் காட்டமுடியும் ?

சராசரி வருகைதரும் மாணவர்களின் எண்ணிக்கை 69 ஆக இருந்தால்கூட ஒரே ஆசிரியர்தான் அவர்கள் அனைவரையும் கவனித் தாக வேண்டும் என்றால், அத்தகைய நிலையில் அந்த ஆசிரியரால் அளிக்கப்படுகிற கல்வி உயர்ந்த தரம் உள்ளதாக எப்படி இருக்க முடியும்? மாணவர்களின் எண்ணிக்கை இவ்வளவு ஏராளமாக இருந் தால் அவர்களையெல்லாம் ஓர் இடத்தில் மடக்கிவைத்து, ஒருவ ரோடு ஒருவர் சண்டையிடாமலும் கூச்சல் போடாமலும் அவர்களை அடக்கி வைக்கும் 'போலீஸ்' வேலையைச் செய்வதற்குத்தான் ஆசிரி யரின் நேரம்—நினைப்பு—அறிவு- ஆற்றல் அத்தனையும் செலவாகுமே தவிர கல்விப் பயிற்சியை அளிப்பதற்கு உரிய வாய்ப்பும் வசதியும் எங்கிருந்து கிடைக்கமுடியும்?

'' இப்போது நம் ஆரம்பப் பள்ளிகளில் உள்ள நிலைமையைப் பார்த்தால் ஆசிரியர்கள் யாவரும் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக இருக்கிறார்கள் என்றே சொல்ல முடியவில்லை. அவர்கள் தாங்கள் செய்ய வேண்டிய ஆசிரியப் பணியை விட்டுவிட்டு வேறு பற்பல பணிகளைச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

மதிய உணவுத் திட்டம் வந்ததற்குப் பின்னால் அந்தத் திட்டத் திற்குரிய கணக்கை எழுதும் வேலையே ஆசிரியர்களுக்கு ஒரு பெரிய வேலையாக ஆகிவிட்டது. அந்த உணவுத் திட்டத்திற்காக வசூல் செய்யப்போகும் வேலை வேறு இருக்கிறது. அதற்கு மேல், மேல் அதிகாரிகள் வருகிறார்கள் என்றால் அதைக் கவனிக்க வேண்டிய வேலை—போர்நிதி வசூல் செய்ய வேண்டிய வேலை—இப் படிப் பலப்பல வேலைகள் ஆசிரியர்கட்கு இருக்கின்றன.

படிக்கும் பிள்ளைகளை எடுத்துக் கொண்டாலோ, பஸ் ஸ்டாண் டில் ஒவ்வொரு பிள்ளையும் கையில் ஒரு கார்டை வைத்துக்கொண்டு, '10 காசு போடுங்கள். எங்கள் ஆசிரியர் வாங்கிக்கொண்டு வரச் சொன்னார்' என்று சொல்லிக் கேட்கிறார்கள்.

பிள்ளைகள், ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்க வேண்டியிருக்கிறது. ஆசிரியர்கள் டெபுடி இன்ஸ்பெக்டர் சொல்வதைக் கேட்க வேண்டியிருக்கிறது. டெபுடி இன்ஸ்பெக்டர் அவருக்கு மேலே இருக்கின்ற டி. இ. ஓ. சொல்வதையும், டி. இ. ஓ. அவருக்கு மேலே இருக்கிற டைரக்டர் சொல்வதையும் கேட்க வேண்டியுள்ளது.

இவ்வாறு அதிகாரிகளே ஆசிரியர்களுக்குப் பற்பல வேலைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தால், கல்வியின் தரம் குறையத்தானே செய்யும்?''

திருச்சி நகரத் தொகுதி உறுப்பினர் **திரு. அன்பில் தர்மலிங்கம்** சட்ட மன்றத்தில் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவின் ஒரு பகுதி இது.

இப்படியெல்லாம் கல்வியின் தரம் குறைவதற்குத் தேவையான சூழ்நிலையை அரசாங்கமும் அதிகாரிகளுமே ஏற்படுத்திவிட்டு, அதன் பின், கல்வியின் தரம் குறைந்து விட்டதே மறைந்து விட்டதே என்று கைகளைப் பிசைந்து கொள்வதால் என்ன பலன்? தினை விதைத்தவன் தினையைத்தானே அறுக்க முடியும்? கொள்ளை விதைத்து விட்டு எள்ளை அறுவடை செய்தல் வேண்டும் என்றால் அது எப்படி முடியும்?

ஆரம்பக்கல்வியைப் பற்றிய பலவகைப் பிரச்சினைகளைச் சட்ட மன்றத்தில் அழகாகவும் ஆணித்தரமாகவும் திட்டவட்டமாகவும் தெள்ளத் தெளிவாகவும் எடுத்து விளக்கியுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் நாம் மனமாரப் பாராட்டுகிறோம்-போற்றுகிறோம்—பணிவன்போடு கூடிய நன்றியுணர்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இதே முறையில் கல்வி உலகத்தைச் சேர்ந்த பிரச்சினைகளைச் சட்டமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்தி அமைச்சர்களின் அன்புப் பார்வை அவற்றின்மீது படும்படிச் செய்ய வேண்டும் என்று அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

---

## அறிவுக் கதிர்

வில்லுக்கு அம்பு எப்படியோ, அப்படி ஆணுக்குப் பெண். ஒன்று இல்லாவிட்டால் மற்றொன்றால் பயன் இல்லை.

—லாங்பெல்லோ

எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதைக் கண்டறிய வேண்டுமா? ஆம் எனில் இறந்த காலம் எனும் தீர்க்கதரிசியிடம் செல்லுங்கள். அவனால்தான் அதைக் கண்டறிந்து சொல்ல முடியும்.

—பைரன்

# சென்னை சட்ட சபையில்

## கல்வி மானியத்தின்மீது—காஞ்சி. மணிமொழியார் பேச்சு

14—3—63

மாமன்றத் துணைத்தலைவர் அவர்களே! இன்றைய தினம் கல்வி மானியத்தின்மீது எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கல்விப்பணி தலை சிறந்த பணி; ஈடு இணையற்ற பணி. அதன் சிறப்புக்களைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய ஈரோடு உறுப்பினர் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். ஒரு நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும் கல்வியின் தரமான முன்னேற்றத்தில் தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அத்தகைய கல்வி வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கிற ஆரம்பக் கல்வியின் நிலை எப்படி இருக்கிறதென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் உள்ளத்தில் துயரக் கோடு படாமல், துன்பச்சாயல் படியாமல் இருந்தால்தான் ஆரம்பக் கல்வி பெறுகிற இள மாணவர்களின் பிஞ்சு உள்ளத்தில் நல்ல அறிவும், மேலான பண்பாடும், சிறந்த இலட்சியமும் உயர்ந்த நோக்கமும், உறுதியான தன்னம்பிக்கையும் நன்கு உரம் பெற்று வளர முடியும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர். ஆனால் இன்றைய தினம் இன்பமும் எழுச்சியும் ஆரம்பாசிரியர்களிடம் காணப்படுகிறதா? அவர்களுக்கு அடிக்கடி ஏற்படுகிற தொல்லைகள் — அவ்வப் போது அனுப்பப்படுகிற ஆணைகள் எல்லாம் துன்பத்தையும் துயரத்தையும் பெருக்குவனவாகவே இருக்கின்றன. இதனால் ஆரம்பக் கல்வியின் தரம் குறைந்து வருகிறதென எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்களின் கருத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதாகவே இருக்கிறது.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் எப்படி துன்பத்திற்கு உள்ளாக்கப் படுகிறார்கள் என்று பாருங்கள். பொதுவாக இப்போது எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிற பொருளாதார நெருக்கடி அவர்களுக்கும் இயற்கையிலேயே ஏற்பட்டிருக்கிறது. நாளுக்கு நாள் விலைவாசி ஏறிக்கொண்டே போவதால் குறைந்த வருமானத்தில் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையைச் சீராகவும் சிறப்பாகவும் நடத்த முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதனை மேலும் பெருக்கு

வதற்கான வகையில் அதிகாரிகளின் ஆணைகள் பல வந்துகொண்டிருக்கின்றன. காட்டு மிருகங்களிடமிருந்து தப்பி ஓடுகிறவன் காலில் கல்லும் முள்ளும் குத்தினால் எப்படியோ அப்படியே விலைவாசி ஏற்றத்தால் சமாளிக்க இயலாது துன்பப்பட்டுக்கொண்டிருக்கிற ஆசிரியர்கள் அதிகாரிகளினால் அடிக்கடி அனுப்பப்படும் பல ஆணைகளினால் தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் ஆளாகியிருக்கிறார்கள்.

பொதுக்கல்விக்காக ரூபாய் 25 கோடி ஒதுக்கி யிருக்கிறதென்றும் அதில் ஆரம்பக் கல்விக்கு 18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் பெருமையோடு கூறப்படுகிறது. இவ்வளவு தொகை செலவு செய்தும் ஆரம்பாசிரியர்களுக்கு நிம்மதி கிடைக்கவில்லையே! அவர்களுக்குத் தரப்படும் தொல்லைகளினால், ஆரம்பக்கல்வியால் என்னபலன் ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ அந்தப் பலன் மாணவர்களுக்குச் சிறிதும் கிடைப்பதில்லை. கல்வித்துறை அதிகாரிகள் ஆரம்பாசிரியர்கட்கும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகட்கும் அவ்வளவு தொல்லை தருகிறார்கள். அவர்கள் வாழ்வில் நிம்மதி இல்லை.

முதலாவதாக, தொழிலாசிரியர் பற்றி, நேற்று கல்வி மந்திரி அளித்த பதிலில் எட்டாம் வகுப்பு மீண்டும் அநேகமாக இருக்கக் கூடும் என்றும், ஏற்கெனவே உள்ள ஆசிரியர்களை உத்தரவு பாதிக்காதென்றும் கூறப்பட்டது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம் தொழிலாசிரியர்கட்கு முழுநேர வேலை தரப்படவேண்டும் என்பதேயாகும். முன் வகுப்பு ஒன்றில் தொழிற்பயிற்சியைத் தொடங்கியாவது அவர்களுக்குப் பகுதிநேர வேலை யென்றிராமல் முழுநேர ஊதியம் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி ஆசிரியர்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள். நிலைமையைத் தெளிவு படுத்த வேண்டியது அரசினரின் கடமையாகும்.

இரண்டாவதாக, 35 மாணவர்கட்கு ஒரு ஆசிரியர் என்ற திட்டம் புதிதாகப் புகுத்தப்படுகிறது. பொதுவாக முன்பெல்லாம் 20 மாணவர்கட்கு ஒரு ஆசிரியர் என்ற முறை இருந்தது. 1958-ல் ஆஜராகும் மாணவர்களில் சராசரி 35-க்கு ஒரு ஆசிரியர் என்று ஸ்லாப் சிஸ்டம் கொண்டு வரப்பட்டது. 35 மாணவர்களுக்குமேல் ஒரு வகுப்பில் ஒரு மாணவர் அதிகமாக இருந்தாலும் இரண்டு ஆசிரியர்களைப் போட்டுக்கொள்ள அப்போது வசதி இருந்தது. அதனால் கல்வியின் தரம் குறையாமலிருந்தது. ஆசிரியர்களும் தனித்தனி மாணவர்களைக் கவனிக்க முடிந்தது. ஆனால் புதிய உத்தரவின்படி ஆஜர் பட்டியல் பார்த்து, பள்ளிக்கூடத்துக்கு வரும் மொத்த மாணவர்களைப் பார்த்து 35 மாணவர்கட்கு ஒரு ஆசிரியர்

என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 60, 65 மாணவர்கட்கு ஒரு ஆசிரியர் இருக்கவேண்டி நேரலாம், அல்லது இரண்டு மூன்று வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் என்றும் இருக்க நேரலாம். இது ஆரம்பக்கல்விக்கு மிகவும் கேடு பயக்கக்கூடியது. இந்த உத்தரவை மாற்றி பழையபடி ஸ்லாப் சிஸ்டத்தையாவது கொண்டு வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு வகுப்பில் 35-க்கு மேல் மாணவர்கள் இருந்தால் மற்றொரு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டியதும் ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனி ஆசிரியர் இருக்க வேண்டியதும் இன்றியமையாததாகும். இதை அமைச்சரவர்கள் கவனித்து அதற்கான திட்டத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, நிர்வாகச் செலவுக்கு மானியம் வழங்குவது. உதவிபெறும் தொடக்கப்பள்ளிகட்கு நிர்வாகச் செலவுகட்காக உதவித்தொகை எவ்வளவு தரப்படுகின்றதென்று பார்ப்போம். 5 ஆசிரியர்கள் உள்ள ஒரு பள்ளியில் 4 ஆசிரியர்கள் ஹையர் எலிமெண்டரி ஆசிரியர்களாக இருந்தால் 65 ரூபாய் வீதம் 260 ரூபாய் சம்பளம் தரப்படுகிறது. ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியருக்கு 90 ரூபாய் தரப்படுகிறது. இதற்கு முன்பு 20 சதம் நிர்வாகச் செலவுக்காகத் தரப்பட்டு வந்தது. இப்போது 10 சதமாகக் குறைக்கப்படுகிறது. 20 சதம் 50 சதம் வரையில்கூட அதிகாரிகளால் அப்போது தரப்படுவதுண்டு. இப்போது 10 சதம் மட்டுமே பேசிக் சம்பளத்தில், நிர்வாகச் செலவுக்காகத் தரப்படுமானால், 5 ஆசிரியர்களுக்கு 350 ரூபாய் சம்பளம் தரும் அந்தப் பள்ளிக்கு 35 ரூபாய் மட்டுமே நிர்வாகச் செலவுக்காகக் கிடைக்கக்கூடும். அந்தப் பள்ளியின் செலவுகளைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் வாடகை மட்டும் 5 வகுப்பு உள்ள பள்ளிக்கு குறைந்தது 80 ரூபாய் கொடுத்தாக வேண்டும். தளவாடச் செலவுகள் - மை, சாக்கு, போர்டு, படங்கள். இப்படிப்பட்ட சாமான்களை வாங்க ரூ. 10 செலவாகிறது. ஆயாவுக்கு 15 ரூபாய், பெருக்குகிறவருக்கு 15 ரூபாய், தோட்டிக்கு 5 ரூபாய், தண்ணீர் ஊற்றுபவருக்கு 10 ரூபாய். பிராவிடண்டு பண்டுக்கு ஒரு ஆசிரியருக்கு ரூபாய்க்கு 6 காசு வீதம் 11 ரூபாய், ரிபேர், போக்குவரத்து, தபால் செலவுகட்கு 25 ரூபாய். இதர சில்லரைச் செலவுகள் சேர்த்தால் ரூபா 175 ஆகிறது. இதுவே மிகக் குறைந்த கணக்கு. ஆனால் சர்க்கார் தருவதோ ரூபாய் 35. மொத்தத்தில் ஐந்தில் ஒரு பங்கு. சென்னை நகரைப் பொறுத்தவரையில் இந்தத் தொகைக்கு வாடகைக்குக் கட்டடம் கிடைக்குமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, இந்தப் பத்து சதத்தை இருபது சதமாக உயர்த்தித்தர

வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இது மிகமிக அவசிய மானதென்று நான் கருதுகிறேன்.

நான்காவதாக, சம்பள இழப்புத் தொகைக்கு ஈடுதருவது: இதுபற்றி தொடக்கத்தில் சொன்னதெல்லாம், எவ்வளவு சம்பளம் மாணவர்களிடம் வாங்குகிறார்களோ அந்த அளவுக்குத் தரப்படும் என்பதாகும். பின்னால் அது குறைக்கப்பட்டு சென்னையைப் பொறுத்தவரையில் 6–ம் வகுப்புக்கு ரூ. 1–2–0 வீதமும், 7–ம் வகுப்புக்கு ரூ. 1–6–0 வீதமும், 8–ம் வகுப்புக்கு ரூ. 1–8–0 வீதமும் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது ஒரு உத்தரவு வந்திருப்பதாகப் பலர் அஞ்சுகிறார்கள். அந்த உத்தரவுப்படி 6–வது வகுப்புக்கு 6 அணு என்றும் 7–வதுவகுப்புக்கு 7 அணு என்றும் 8–வது வகுப்புக்கு 8 அணு என்றும் சம்பள இழப்புத் தொகை தரப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி 6 அணு 7 அணு 8 அணு வீதம் தருவது மிகவும் குறைவு. இன்று நகரசபைப் பள்ளிகளுக்கும், பஞ்சாயத்து பள்ளிகட்கும், மற்ற உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த தொடக்க வகுப்புகளுக்கும் தரப்படும் தொகை இதைவிடப் பல மடங்கு உயர்வாக இருக்கிறது. இவற்றைக் கவனித்துத் தவறாமல் 1 ரூ. 2 அணு, 1 ரூ. 6 அணு, 1 ரூ. 8 அணு என்ற முறையிலேயே இனியும் தொடர்ந்து தரவேண்டும் என்றும் சிறிதும் குறைக்கக் கூடாது என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் பல குறை பாடுகளைச் சொல்ல வேண்டுமென்று இருந்தும் நேரமாகிவிட்டதால் இவற்றை மந்திரிகள் கவனித்து பரிகாரம் காண வேண்டுமெனக் கூறிப் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

---

## அறிவுக் கதிர்

பிறர் நம்மைப்பற்றி இல்லாததையும் இருக்க முடியாததையும் சொல்லிச் சொல்லிப் பாராட்டுவது, அதை நாம் பொறுமையோடு உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருப்பது – இது ஒரு கௌரவமா? இல்லை! காலத்திற்குக் கேடு!

—ஜான் மில்டன்

நம்மைப்பற்றிப் பலர் தவறாக நினைக்கிறார்களா? நினைத்துக் கொண்டு போகட்டும். அதையெல்லாம் திருத்திக்கொண்டிருக்க நமக்கு எது நேரம்? அதற்கெல்லாம் வீணாக்கும் அளவுக்கு மிக நீண்ட வாழ்நாளா நமக்கு இருக்கிறது?

—ஜார்ஜ் எலியட்

# சென்னை மாநில ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் மாநாடு

# ஒத்திவைப்பு.

---

நமது மாநாட்டிற்குக் கல்வி மந்திரி, திரு M. பக்தவச்சலம் அவர்களை வரவழைப்பதற்காக, அன்றுரைக் கேட்டதற்கு மார்ச்சு மாதம் முடியத் தனக்கு ஓய்வு இல்லை என்றும், ஏப்ரல் மாதத்தில் தேதி கொடுப்பதாகவும் சொல்லிவிட்டார். ஆதலால் மாநாடு ஏப்ரல் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

வடாற்காடு, தென்னாற்காடு, மதுரை, தஞ்சாவூர், சென்னை முதலிய ஜில்லாக்களிலிருந்து நிர்வாகிகள் சங்கத்தின் பிரதிநிதிகள், சென்னைக்கு வந்து எயிடெட் பள்ளிகளுக்கு ஏற்பட்டுள்ள குறைகளை, கனம் கல்வி மந்திரி அவர்களையும், பிரதம மந்திரி அவர்களையும், கல்வி இலாக்கா டைரக்டர் அவர்களையும், நேரில் பேட்டி கண்டு விளக்கிச் சென்றிருக்கிறார்கள். சென்னையில் மாநாட்டை சிறப்பாக ஏப்ரல் மாதத்தில் நடத்தப் பல ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. கல்வி மந்திரி மாநாட்டிற்கு வரும் தேதியை அறிவித்ததும் நிகழ்ச்சி நிரல் எல்லோருக்கும் அனுப்பி வைக்கப்படும். பத்திரிகையிலும் விளம்பரம் செய்யப்படும்.

சென்னை மாநில, நிர்வாகிகள் சங்கம்
94-95, புதுத்தெரு, (ஆரம்பக்கல்வி நிலையம்) மண்ணடி, மதராஸ்-1

P. வீரராகவன்,
தலைவர்.
A. R. சேஷாசலம்,
பொதுக் காரியதரிசி.

---

## அறிவுக் கதிர்

இயற்கை என்பது முதல். கலை என்பது அதன் நகல்.

—செனேகா

வெற்றிகளைவிட அதிக வெற்றி வாய்ந்த தோல்விகளும் சில இருக்கின்றன. சில வேளைகளில், வெற்றிகளைப் பெறுவதைவிட, அத்தகைய தோல்விகளைப் பெறுவதே சாலச் சிறந்ததாக அமைகிறது.

—மாண்டெய்ன்

புத்தகங்கள் - அவை சிந்தனையின் குழந்தைகள்.

-ஜொனதன் ஸ்விப்ட்

# ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களை – புதிய உத்திரவு பாதிக்காது

---

ஒரு ஆசிரியருக்கு — 35 பிள்ளைகள் விகிதம் பாடசாலைகளில் அமைக்க வேண்டுமென்ற **புதிய உத்திரவு தற்போது உள்ள ஆசிரியர்களை எந்த வகையிலும் பாதிக்காது.** இந்தப் புதிய உத்திரவை புரிந்துகொள்ளாமல், சில கல்வி அதிகாரிகளும், பஞ்சாயத் யூனியன் அதிகாரிகளும், தவறாக உத்திரவுகள் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக சென்னை மாநில, எய்டெட் ஆரம்பப்பள்ளி நிருவாகிகள் சங்கத்தின் பொதுக் காரியதரிசி, திரு. A. R. சேஷாசலம் அவர்களும், நிருவாக அங்கத்தினர் வித்துவான் திரு. V. கணேசமூர்த்தி அவர்களும், உடனடியாக அரசாங்க அலுவலகத்திற்கு 25-3-63 காலை கல்வி இலாகா அதிகாரிகளைப் பேட்டி கண்டனர். **அதற்கு முக்கிய அதிகாரிகள் புதிய உத்திரவால் எக்காரணத்தைக் கொண்டும் ஆசிரியர்களை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும்,** இந்த உத்திரவு 1963, ஜூன் மாதத்திலிருந்து தான் அமுலுக்கு வருகிறது என்றும், அப்படி வந்தாலும் '62'–63–இல் வேலை செய்து வரும் ஆசிரியர்களை எந்த வகையாலும் பாதிக்காது என்றும், ஆனால் இனி, புதிதாக ஆசிரியர்களை ஏற்படுத்தவோ, லீவில் செல்லும் ஆசிரியர்களுக்கு பதில் ஆசிரியர்கள் நியமிக்கவோ முடியாதென்றும், அப்படி நியமிக்க வேண்டுமானால் ஒவ்வொரு ஆசிரியருக்கும் சராசரி 35 பிள்ளைகள் ஆஜர் தொகை (Average attendance) விகிதம் இருந்தால் தான் ஆசிரியர்கள் நியமிக்கலாம் என்றும் விளக்கினர். இந்த விளக்கத்தை கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பியிருப்பதாகத் தெரிவித்தனர்.

**P. வீரராகவன்,**
தலைவர்.
மாநில நிர்வாகிகள் சங்கம்
(ஆரம்பக்கல்வி நிலையம்)
சென்னை–1.

***************************

# நாட்டுப் பாதுகாப்பில் ஆசிரியர்களின் பங்கு

[N. D. சுந்தரவடிவேலு, சென்னை ராஜ்ய கல்வி இயக்குநர்.]

***************************

ஒரு நாட்டின் இதயம் பள்ளிக்கூடம். சரி, நாட்டின் உயிர் நாடி யார்? இதயமாகிய பள்ளிகளை இயக்குபவர்கள்தானே. எனவே ஆசிரியர்களே உயிர் நாடி என்பதைக் கூறவா வேண்டும்? அவர்கள் நிலையே நாட்டின் நிலை. அவர்களிடம் நாட்டுப் பற்று மிகுந்து இருந்தால், நாட்டு மக்களிடம் நாட்டுப்பற்று மிகுந்து இருக்கும். அவர்களிடம் தியாக உணர்ச்சி நிறைந்து இருந்தால் நாடு முழுவதும் தியாக உணர்ச்சி பரவியிருக்கும். ஆசிரியர்கள் வெறும் உபதேசிகள் மட்டும் அல்லர்; சிறந்த வழிகாட்டிகள்; ஆகவே, சாதாரண காலத்திலும் சரி, நெருக்கடியான காலத்திலும் சரி, நாட்டை உருவாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களையும் ஆசிரியைகளையும் சேர்ந்ததாகும். நாட்டிற்குப் பலவகைகளில் உதவும் பொறுப்பும் அவர்களுடையதே.

இப்போது நம் நாட்டில் நெருக்கடி ஒன்று ஏற்பட்டிருக்கிறது. சென்ற அக்டோபர் 20 ஆம் நாள் நம் நாட்டின் வட எல்லையில் போர் தொடுத்தது சீனா. வஞ்சகத்தின் காரணமாகத் தொடங்கப்பட்டது இப்போர். இப்போது சில வாரங்களாகச் 'சுடுதல்' ஓய்ந்திருக்கிறது. ஆயினும் நெருக்கடி தீர்ந்தா விட்டது? இல்லவே இல்லை. 'சுடுதல்' நின்றிருப்பதைக்கண்டு ஏமாந்து விடக்கூடாது. அயர்ந்து விடக்கூடாது. பாதுகாப்பு முயற்சிகளையும் தளர்த்திவிடக்கூடாது, என்றும் எவரும் இந்திய மண்ணைக் கவர நினைக்கமுடியாத அளவிற்கு நம் பாதுகாப்புப் பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்! என நம் தலைவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதைச் சிந்தையில் இருத்துவது நல்லது.

இந்நெருக்கடியில் ஆசிரியர்கள் ஆசிரியைகள் இதுவரையில் செய்தது என்ன? இனிச் செய்ய வேண்டியது என்ன? இவற்றைச் சிந்திப்போம்.

## நொடிப்பொழுதில் ஆசிரியர் ஆதரவு

நெருக்கடி ஏற்பட்டதும், நொடிப்பொழுதில் ஆசிரியர்கள் ஆதரவு கிடைத்தது. கல்லூரி ஆசிரியர்கள் முதல் தொடக்க நிலை ஆசிரியர்கள் வரையில் உள்ள யாவரும் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை அளித்தனர். பிறர் தூண்டுதலின்றிக் கொடுத்தனர்; தாமாகவே கொடுத்தனர். தயக்கமின்றிக் கொடுத்தனர். வெகு தாராளமாகக் கொடுத்தனர். முதல் ஆவேசத்தில் ஒரு தடவைகொடுத்து, பின்பு நிறுத்தி

விட்டனரா? அதுதான் இல்லை. அடுத்தடுத்துக் கொடுத்து வருகின்றனர். மாதந்தோறும் ஒரு நாள் ஊதியத்தைப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாகக் கொடுப்பதாகப் பல ஆசிரியர் சங்கங்களின் சார்பில் தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவை வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. ஆசிரியர்களுக்கு அதிக சம்பளமா என்ன? இல்லையே. ஆரம்ப ஆசிரியர்களின் நிலையோ மேலும் மோசமானது. ஆயினும் அவர்களுடைய கூட்டணியின் மாநில மாநாட்டு முடிவு என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? தற்போதைய நெருக்கடி திருகின்ற வரைக்கும் தட்டுத்தடங்கலின்றித் தொடர்ந்து மாதத்திற்கு ஒருநாள் சம்பளத்தை நன்கொடையாக வழங்குவது என்பதே. மற்றவர்களும் அவ்வாறே உறுதி பூண்டுள்ளனர். ஆகவே தத்தம் சொந்த கஷ்டங்களையெல்லாம் எப்படியும் சமாளித்துக் கொண்டு, எல்லா ஆசிரியர்களும் ஆசிரியைகளும் தாய்நாட்டைப் பாதுகாக்க நிதியுதவிபுரிவார்கள். தொடர்ந்து புரிவார்கள் என்பது திண்ணம். இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளேயே 15 லட்சம் வழங்கியிருப்பது பாராட்டுதலுக்குரியது.

பணத்தியாகம் என்பது ஆசிரியர்களோடு மட்டும் நிற்கலாமா? எல்லோரிடையிலும் பரவவேண்டாவா? அதையும் ஆசிரியர்கள் ஆசிரியைகள் தூண்டவேண்டும். எழுத்தறிவிப்போர், இறைவனுக்கு ஒப்பாவர். அவர்கள் செல்வாக்கும் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியுள்ளது. அச்செல்வாக்கைக் கொண்டல்லவா, நடுப்பகல் உணவுத்திட்டத்தை மாநிலம் முழுவதிலும் பரப்பினோம்? ஆசிரியர்களின் ஆலோசனையையும் தன்னூக்கத்தையும், தூண்டுதலையும் செல்வாக்கையும் அல்லவா பள்ளிச் சீரமைப்பிற்கு முதலாக்கினோம்? அவர்களால் தானே, இலட்சக்கணக்கான மாணவ மாணவிகளுக்குச் சீருடை கிடைத்துள்ளது.

## செல்வாக்கைப் பயன்படுத்தல்

அளவிடமுடியாத பெரும் செல்வாக்குப் படைத்தவர்கள் தமிழ்நாட்டு ஆசிரியர்கள். அவர்கள், அச்செல்வாக்கை மற்றொரு நல்ல செயலுக்குத் திருப்பிவிட வேண்டும். பாதுகாப்பு நிதிக்குத் தாராளமாக வழங்கும்படி பொது மக்களை ஊக்குவிக்கவேண்டும். பணத்தை மட்டும் கொடுத்தால் போதுமா? ஒவ்வொரு குடும்பமும் தன் சக்திக்கு ஏற்ற அளவில் தங்கத்தைத்தரவேண்டும். ஆசிரியர்களும் ஆசிரியைகளும் இப்பிரசாரத்தை மேற்கொண்டால், விரைவில் ஏராளமான தங்கம் எளிதாகக் குவிந்துவிடும். ஆகவே ஆசிரியத் தோழர்கள் மனம் உவந்து கொடுக்கட்டும், மன மகிழ்ச்சியோடு கொடுக்க வைக்கட்டும்.

பாதுகாப்பிற்குப் பணம் மட்டுமா தேவை? இன்னும் பல தேவை. வாலிபமும், வன்மை

யும் உடையவர்கள் இராணுவத்திலே சேரவேண்டும். அவை இல்லாதவர்கள் என்ன செய்வது? இதுதானே உங்கள் கேள்வி? அவை இரண்டும் உடையவர்களைப் பட்டாளத்தில் சேரத் தூண்டி ஊக்குவிக்க வேண்டும்.

போர் நெருக்கடியில் தேவையானது மற்றொன்று. அது எது? அதுவே ரத்த தானம். ஆசிரியர்களும் தம்மால் முடிந்த அளவு இரத்ததானம் செய்யவேண்டும். பிறரையும் இரத்ததானம் செய்யுமாறு தூண்டவேண்டும். மேலும் செய்யவேண்டியது யாது? ஆம் உண்டு.

தீமையிலும் நன்மை விளைவது உண்டு என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சீன ஆக்கிரமிப்பால், நம் மக்களிடையே நாட்டுப் பற்றும் ஒற்றுமை யுணர்ச்சியும் மேலோங்கி யுள்ளன. இவை நன்றாக வேரூன்ற வேண்டும். அதற்கான தொண்டை ஆசிரியர்களும் ஆசிரியைகளும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும். "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு" என்று மாணவர்கள் மனத்தில் நன்றாகப் பதிய வைக்க வேண்டும். முற்கால மன்னர்கள் சொந்த விரோதத்தை முன்னிட்டுப் போரிட்டனர். வெறும் புகழ்ச்சிக்காகவே போரிட்டனர். தற்பெருமைக்காகத் தங்களுக்குள்ளாகவே போரிட்டனர். இதன் காரணமாக அந்நியப்படை யெடுப்புகள் நிகழ்ந்தபோதும் ஒன்றுபடத் தவறிவிட்டனர். மாறாகப் பகைவனுக்குத் துணை போயினர். அத்தவற்றை நாம் செய்யக் கூடாது என்னும் உணர்ச்சியை மாணவ மாணவிகளுக்கு ஊட்ட வேண்டும். பிரிக்க முடியாத ஒற்றுமையோடு கூடிய பாரதமே, சுதந்திர பாரதமாக, குடியாட்சிப் பாரதமாக, பண்பாட்டுப் பாரதமாக விளங்கும் என்பதை உணர்த்தவேண்டும்.

## பள்ளி எல்லைக்கு அப்பாலும்

ஆசிரியர்களின் தேசப்பணி பள்ளிக்கூட எல்லைக்குள் நின்றுவிடுவதா? இல்லை. பள்ளிக்கூடம் சமுதாய மையம்; நாட்டுப் பற்றும், ஒற்றுமை யுணர்ச்சியும் தியாக சிந்தனையும் அம் மையத்திலிருந்தே ஊர்முழுவதும் பரவ வேண்டும். அவற்றைப் பரப்புவது ஆசிரியர்களின் தொண்டாகும். அதற்கேற்பப் பொது மக்களிடையில் பிரசாரம் செய்ய வேண்டும்.

'அதிக உழைப்பு; அதிக உற்பத்தி' இதுவே இன்றைய ஊக்கம் ஊட்டும் முழக்கம். தேவையான முழக்கமும் கூட. இதைக் கேட்டறிந்த பிறகு ஆசிரியர்கள் செய்ய வேண்டியதென்ன? எல்லோருக்கும் ஐந்து மணிப்பாடம் என்பதை மாற்ற வேண்டும். மதிப்பெண்கள் குறைவாக வாங்கும் சில மாணவ மாணவிகளுக்குக் கூடுதலாக அரைமணியோ, முக்கால் மணியோ பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும்

ஒவ்வொரு பாடத்திற்கு ஒவ்வொரு நாள் என்று திட்டமிட வேண்டும். குறைந்த மதிப்பெண்கள் வாங்குகிறவர்களுக்கு அத்திட்டப்படி முறையாகக் கற்றுக்கொடுக்க வேண்டும். இதுவே ஆசிரியர் ஆசிரியைகளிடம் எதிர் பார்க்கும் அதிக உழைப்பு. இந்த அதிக உழைப்பின் பலனே தேர்ச்சி அதிகமாவதே. இதற்காக எப்படியோ மேல் வகுப்பிற்குத் தள்ளிவிடலாமா? கூடவே கூடாது. தேறுவதற்கு வேண்டிய மதிப்பெண்கள் எல்லோரும் வாங்கும்படி செய்யவேண்டும். எடுத்த எடுப்பிலேயே இவ்வாண்டில் இது முடியுமா என்று மலைக்காதீர்கள். ஆண்டுப் பரீட்சைக்கு இன்னும் மூன்று மாதங்கள் உள்ளன. இதற்குள் எவ்வளவோ செய்ய முடியும்? திட்டமிட்டுக் கூடுதலாகக் கற்பிப்பதின் மூலம் அதிகம் பேரைத் தேறவைக்க முடியும். தேர்ச்சி உயர்வு இவ்வாண்டில் தொடங்கட்டும். மூன்றாண்டுகளில் முழுத்தேர்ச்சி நிலைக்கு உயரட்டும். இது தமிழ் நாட்டு ஆசிரியர்கள் ஆசிரியைகளால் முடியக்கூடிய காரியமே. உங்களில் எவருக்கும் அவநம்பிக்கை கொஞ்சமும் வேண்டா.

## மதுரை ஆசிரியர்கள் காட்டிய வழி

போர் முனைகளில் பணிபுரியும் வீரர்களின் குடும்ப நலன்களைப் பாதுகாக்கத் தனிக் கவனம் தேவை. ஆசிரியர்களோ தமிழ் நாடெங்கும் சிற்றூர் தோறும் இருக்கிறார்கள். அவர்கள் தான் இதில் கவனம் முழுவதையும் செலுத்தி நன்றாகச் செய்ய முடியும். இதற்கு, மதுரை மாவட்ட ஆசிரியர்கள் வழிகாட்டியுள்ளனர். வசதியும் ஓய்வும் உடைய ஆசிரியர்கள் பலர் முன் வந்து 'போர்வீரர் குடும்ப நலக்குழு'க்களை அமைத்துள்ளனர். போர் வீரர்களின் குடும்பங்களைப் பற்றிய எல்லாத்தகவல்களையும் திரட்டுவது முதல் வேலை. அக் குடும்பங்களின் தேவைகளைத் தெரிந்து கொள்வது அடுத்த வேலை. அவற்றை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுவது, உதவிகளைப் பெற வழி வகை செய்வது அதற்கு அடுத்த வேலை. குடும்பங்களுக்காகக் கடிதங்களை எழுதிக் கொடுத்தல், குடும்பங்களுக்கு வரும் கடிதத்தைப் படித்துக் கொடுத்தல், அவர்களின் குழந்தைகளைத் தகுதி வாய்ந்த பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர்த்தல். வேண்டிய உதவிகளைப் பெறவுதவுதல் ஆகியவையே நாம் செய்யவேண்டிய தொண்டாகும். மதுரை மாவட்ட ஆசிரியர்கள் காட்டிய வழியை மற்ற மாவட்ட ஆசிரியர்களும் பின்பற்றுவதைப் பார்க்கிறேன். விரைவில், எல்லா மாவட்டங்களிலும், 'போர் வீரர்களின் குடும்ப நலத் தொண்டை' ஆசிரியர் குழுக்கள் ஏற்றுக் கொண்டன என்ற நல்ல செய்தியை எதிர்பார்க்கலாமா?

மூளை வேலை செய்வோர் ஒவ்வொருவரும், சிறிது உடலுழைப்பிலும் ஈடுபடவேண்டும். இது

தனிநபர் உடலுக்கும் நல்லது; நீண்டகால வாழ்வுக்கும் நல்லது, அது மட்டுமா? நாட்டு நலனுக்கும் நல்லது; பாதுகாப்பிற்கும் இன்றியமையாதது. ஆகவே, ஆசிரியர்களும் அன்றாடம், பள்ளித் தோட்டவேலைகளில் ஈடுபடும்படி வேண்டுகிறேன். மாணவர்களையும் மாணவிகளையும் தோட்ட வேலையில் ஈடுபடுத்தி விட்டு நாம் மேற்பார்வை இடுவது மட்டும் போதாது. முடிந்த அளவு நாமும் அவர்களோடு கலந்து தோட்டத்தில் வேலை செய்யவேண்டும்.

பள்ளிகளில் தோட்டங்களை உருவாக்குவதோடு நிற்கலாமா? நாம் குடியிருக்கும் வீட்டுப் புறக்கடைகளிலும் தோட்டம் அமைக்க வேண்டும். இயற்கையோடு இயைந்த இன்பத்தைச் சிறிது நேரமாவது பெறவேண்டாவா? யாம் பெற்ற இன்பம் பிறரும் பெறட்டுமே! அக்கம் பக்கத்தில் இருப்பவர்களையும் தோட்டம் போடத் தூண்டுவோம்.

பொன்னையும் பணத்தையும் கொடுத்து, கொடுக்கவைத்து, தோட்டம் போட்டு, போட வைத்து, நாட்டுப்பற்றையும், ஒற்றுமை யுணர்ச்சியையும், தியாக உணர்ச்சியையும், நாடு முழுவதும் போற்றி வளர்த்து மதிப்பெண் குறைந்தவர்களுக்குத் தனிக்கவனம் செலுத்தி, கூடுதலாகக் கற்பித்து, தேர்ச்சியைப் பெருக்கி, பாதுகாப்பைப் பலப்படுத்தி, அச்சத்தை வென்று, அமைதியைக் காத்து, அறிவையும் அன்பையும் எல்லோரும் பெற உதவுவது நம் தலையாய கடன்; தனிப்பொறுப்பு. இதை நிறைவேற்றி, வெற்றிகாண்போம் வாரீர். வெல்க பாரதம்.

—"வானொலி"

---

## அறிவுக் கதிர்

புகழ் – அதுதான் இளமைப் பருவத்தின் தணியாத தாகம்.

—பைரன்

ஒரு மனிதனுடைய வாழ்க்கை இலட்சியத்தை அவனிடமிருந்து பறித்துக்கொண்டால், அவனுடைய மகிழ்ச்சி முழுவதையும் பறித்தவர்களாகிறோம். ஏனெனில் இலட்சியத்திற்காகப் பாடுபடுவதில் தான் வாழ்க்கையின் இன்பம் அடங்கியிருக்கிறது.

—இப்சன்

முதலாளித்துவ உற்பத்திமுறை, அதன் அழிவுக்கான கருவை, அதனுள்ளேயே அமைத்துக் கொண்டிருக்கிறது. முதலாளித்வம், முதலாளித்வத்தாலேயே அழிந்துவிடும்.

—காரல் மார்க்ஸ்

# இறவாக்கலை பயின்ற வள்ளல்

(பி. கோதண்டராமன்)

பிறப்பது இறப்பது உறுதி. இதை வாழ்க்கையில் நாம் கண் கூடாகக் காண்கின்றோம். உடல் அழிகிறது; உயிர் போய் விடு கிறது. மனிதன் நூறாண்டு வாழலாம் என்பர். ஒரு சில ரேனும் நூறாண்டு வாழப் பார்க் கிறோம். நூறாண்டுக்கு மேலும் வாழ்பவர் உண்டு. உடல் நீடித் திருக்க உண்ணும் மருந்தைக் காயகற்பம் என்பர். இக்காய கற்ப முறை ஆயுர்வேதத்திலும் ரச சாத்திரங்களிலும் சித்தர் வைத்திய நூல்களிலும் கூறப்படு கிறது. உடலை நரை திரை யின்றி நெடுநாள் இருக்கச் செய் யும் சித்தியைக் காயசித்தி என் பர். இக்காய சித்தி எய்திய சித்தர் அணிமா மகிமா முதலிய சித்திகள் பெற்றிருந்ததாகவும் கூறுவர். பண்டித மதன்மோகன மாளவியா 1938-ல் காய கற்பம் செய்துகொண்டார். ஆனால், அது பல காரணங்களினால் பலிக்கவில்லை. அவருக்குக் காய கற்பம் அளித்த தபஸ்விஜி மகா ராஜ் ஒரு யோகி. அவர் தம் யோக சாதனை நீடிக்கும்பொருட் டுப் பலதடவை காயகற்பம் செய்துகொண்டார். 1770-ம் ஆண்டில் பிறந்தவரும் மொகலாய வம்சத்தினரின் கடைசி மன்ன னை பகதூர் ஷாவின் தர்பாரில் பிரசன்னமாயிருந்தவருமான அவர் 185 ஆண்டுகள் வாழ்ந்து 1955-ல் உயிர் துறந்தார். தமிழ் நாட்டில் தென்னாற்காடு மாவட் டத்தில் திண்டிவனம் தாலூகா வில் புதுச்சேரிக்கு வடக்கே ஐந்து மைல் தொலைவில் உள்ள பொம்மைய மடம் என்று பெயர் பெற்ற வீரசைவமடத்தைச் சார்ந்த சிவஞான பாலய சுவாமி களில் ஒருவர் ஐந்நூறு ஆண்டு கள் வாழ்ந்ததாகக் கூறுவர். காயசித்தி அடையும் பொருட்டுக் காயகற்பம் மட்டுமல்ல, மந்திரம் யோகம் ஆகிய சாதனைகளையும் செய்வர். நாத சித்தர்கள் இற வாமையின் இரகசியத்தை உடம் புக்குள்ளேயே கண்டனர். உடல் வெறும் சடலமன்று; அதிலும் சேதன உணர்வு உண்டு, சக்தி யுண்டு. அச்சக்தியானது ஆறு ஆதார சக்கரங்களில் உறங்கிக் கிடக்கிறது. ஒவ்வொரு ஆதார சக்கரத்திலுமுள்ள சக்தியையும் எழுப்பவேண்டும். பின் மூலா தாரத்திலுள்ள குண்டலினி சக்தியையும் எழுப்பி, பரமன் உறையும் சகஸ்தளத்தை, உச்சி ஸ்தானத்தை சாதகன் அடையச் செய்யவேண்டும். சகஸ்தளத்திற் குச் சிறிது கீழே புருவ மத்தியில் சோம வட்டம் உள்ளது. அங்கே இயற்கையின் சிருஷ்டி தத்துவ மான சோம மதுவை வைத்துள் ளான். அம்மது சாதாரணமாகக்

கீழே பாய்ந்து காலாக்கினியால் விழுங்கப்படுகிறது. அதனால் தான் உடல் அழிந்து மரணம் ஏற்படுகிறது. இந்த அழிவைத் தடுக்க சாதகன் அம்மது கீழே செல்வதைத் தடுத்துத்தானே பருக வேண்டும். அவன் பருகப் பருக உடல் அழிவு நின்று ஒவ்வொரு உயிரணுவும் புத்துயிர் பெறுகிறது. இந்த ரகசியத்தைக் கண்ட சித்தர்கள் குண்டலினி யோகத்தின் மூலம் இறவாமை பெற்றனர். அழிவு தடுக்கப்பட்ட உடல் பொன்னுடலாயிற்று; ஒளியுடலாகத் திகழ்ந்தது. இன்றும் மகா யோகிகளின் உடல் பொன் மயமாகி ஒளி வீசக் காண்கிறோம். ஆயினுமென்ன? இச் சித்த புருஷர்கள் நீண்ட காலம் வாழ்ந்தாலும் இறுதியில் இறக்கத்தானே செய்கின்றனர்? இதற்கு விடையாக நம் முன்னோர் கூறியுள்ள மரபின்படி, திருஞான சம்பந்தர், மாணிக்க வாசகர் போன்ற தவ யோகிகளின் உடல் கீழே விழவில்லை யென்றும், அவர்கள் பெற்ற ஞான உடல் ஒளிமயமாகிப் பேரொளியில் கரைந்தது என்றும் கூறுவர். ஆனால் அது மரபு தானே? நாம் வாழ்க்கையில் காணும் உண்மையல்லவே? ராம கிருஷ்ணர், விவேகானந்தர், ரமணர், அரவிந்தர் ஆகிய மகா யோகிகள் தம் உடலைக் கீழே போட்டுத்தானே சென்றனர்?

இறவாமை அல்லது சாகாநிலை என்னும்போது அது உடலின் நிரந்தர அழியாமையே என உண்மையில் நாம் கொள்ளவில்லை. உடல் கொண்ட மானிடன் வெறும் சடம் அல்லன்; அவன் சின்மயமான ஆத்ம சொரூபியே யாவான். என்று அவன் தான் வெறும் உடல் அல்லேன், அழிவற்ற, பிறப்பு இறப்பற்ற ஆத்மாவே என்றும், தன் சீவாத்மா உண்மையில் பரமாத்மாவே என்றும், உள்ளது ஒன்றே என்றும், அவ்வொன்றே உலகுயிர் யாவுமாக விரிந்ததென்றும் உணர்ந்து, அவ்வொன்றுடனும், அவ்வுலகுயிருடனும் பரிபூரணமாக ஒன்றி விடுகிறானோ அன்றே அவன் பிறப்பு இறப்பற்ற சுத்தான்ம நிலை அடைகிறான். அச் சுத்தான்ம நிலையே சாகா நிலை. தெய்வப் பேருணர்வில், சிற்சக்தியின் அருளுணர்வில் வாழ்வதே சாகா நிலை. அத் தூய நிலையில் உடல் பொன்னொளி வீசுகிறது. ஆண்டவனிடம் சம்பூரணமாகச் சரணடைந்து, உடல் பொருளாவியெல்லாம் அவனுக்கே ஈந்து, அவனுடன் இரண்டறக் கலந்து 'நான் தானாகிப் பேரின்பப் பெருநிலை அடையும் அன்பன் அச் சாகா நிலை அடைந்து பொன்னுடல் பெறுகிறான். நான் தானாகியபின் சாவு ஏது? 'மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால், ஈசனைக் காட்டும் உடம்பு' என்கிறது ஔவைக் குறள். ஈசன் உடலுக்குள்ளேயே குண்டலினி சக்தியாக அமைந்துள்ளான். அன்பனின் யோக சாதனையால் விழிப்புற்ற அச் சக்தி வினையாற்ற ஆரம்பித்ததும்

அவ்வுடல் உருமாறுகிறது; விடுதலைக்கு ஏற்றதாகி விடுகிறது; அச்சம், பிணி, சாக்காடு, துயரம் ஆகியவற்றைக் களைகிறது.

## வள்ளலார் வரலாறு

தமிழ் நாட்டில் பத்தொன்பதாம நூற்றூண்டில் மகா புருஷர் ஒருவர் இத்தகைய இறவாமைப் பேறு பெற்றூர். அவர் தாம் இராமலிங்கர் (1823–1874) ஐம்பது ஆண்டுகளே இங்கிலவுலகில் வாழ்ந்த அவர் அற்புதப் பணிகள் பல செய்தார். சாதி சமய வேற்றுமைகளைக் கண்டித்தார்; உயிர்க் கொலையைத் தடுத்தார்; ஜீவகாருண்யம் போதித்தார்; பசி தீர்த்தார்; சமரச சன்மார்க்கம் நிறுவினூர்; தாம் பயின்ற சாகாக் கலையைப் பாடினூர். சாதி சமய வேறுபாடுகள் மலிந்திருந்த காலம் அது. சங்க நூல்களையும் காவியங்களையும் பெரும்பாலும் பௌத்தர்களும் சமணர்களும் எழுதியிருந்த காரணத்தினூல் அக்கால வித்வான்கள் அவற்றைப் போதிக்க மறுத்தனர். தம் சமயத்தினின்று மாறுபட்ட மாணவர்க்குப் பாடஞ் சொல்ல மறுத்தனர். வள்ளலாரின் அருட்பாவை மருட்பா என்றனர். அவருடைய தீவிரமான கொள்கைகளை ஏற்கக் காலம் வரவில்லை. ஆயினும் விதைத்து விட்டார். தம் பணி முடிந்ததெனக் கொண்டார். ஆண்டவன் ஆணைப்படி கடையை இதுவரை விரித்தோம்; கொள்வாரில்லை; இனி உங்கள் ஊனக் கண்களுக்குத் தோன்ற மாட்டோம். பின்னர் அருட்சோதி ஆண்டவர் வருவார். அப்போது திருவருட் செங்கோலாட்சி நடக்கும். சமரச சன்மார்க்கம் எலலா உலகத்தும் வழங்கும்., பலவகைப்பட்ட சமய பேதங்களும் சாத்திர பேதங்களும், சாதி ஆசார பேதங்களும் போய் சுத்த சன்மார்க்கப் பொது நெறி விளங்கும்.' என்று கூறி மறைந்தார். வள்ளலாரையும் அவர் போதனைகளையும் பின்னரறிந்த ப்ளாவட்ஸ்கி அம்மையார் (பிரம்மஞான சங்கத்தைச் சார்ந்தவர்) தம் நூலில் குறிப்பிட்டதாவது: 'இராமலிங்கர் ஐயமின்றி ஒரு மகாத்மா. உலக சகோதரத்துவத்திற்காக உயர்த்த அவர் அரிய பணி செய்து மானிட சமுதாயத்தைத் தெய்வ நிலைக்கு உயர்த்த அடங்காக் காதலுடன் வாழ்ந்திருக்கிறூர். வட இந்தியா, ருஷியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து அறிஞர் வந்து இங்கே சர்வ சகோதரத்வ சங்கம் ஏற்படுத்துவர் என்று சொன்ன வாக்கு முற்றிலும் சரியெனவே தோன்றுகிறது.' பிரம்ம ஞான சங்கம் ஏற்பட்டது. வடஇந்திய அறிஞர் யார்? உலகில் தெய்விக வாழ்க்கை மலரவும் தெய்விக சமுதாயமொன்று ஏற்படவும் பராசக்தியாம் ஸ்ரீ அன்னையுடன் பணியாற்றி வந்துள்ள மகரிஷி அரவிந்தர்தாமோ, அவர்?

இராமலிங்கர் 1823-ம்ஆண்டு, அக்டோபர் மாதம் 5-ந் தேதியன்று தென்னூற்காடு ஜில்லாவில் மருதூர் என்னும் சிற்றூரில் அவ

தரித்தார். இளமையில் அவருக்குப் படிப்பில் கருத்து செல்லவில்லை. தகப்பனார் இறந்த பின் அவரை ஆதரித்து வந்த தமையன் எவ்வளவோ முயன்றார்; பலிக்கவில்லை. படியாப் பிள்ளை சென்னைக் கந்த கோட்டம் சென்று முருகனுக்குப் பாமாலை சூட்டினான்; அருளறிவு ஊற்றெழுந்தது. பின் திருவொற்றியூரார் அன்பு அவரை ஈர்த்தது. எண்ணிறந்த பாக்கள் பாடினார். ஆண்டவன் ஆட்கொண்டான். அருட் கதவு திறந்தது. அறிவுச் சுடர் விரிந்தது. சீடர் குழுமினர். குடும்பத்தினர் பலவந்தம் செய்ய மணந்துகொண்டார்; இறைவன் அருட் பணிக்குத் தம்மை அர்ப்பணம் செய்து கொண்ட அவருக்கு இல்லறம் நடத்தப் போது ஏது? தம் 24-ம் ஆண்டில் தில்லை சென்று கூத்தினைக் கண்டார். 'தந்தையைக் கண்டேன் யான்' என்று பாடினார். 28-ம் வயதில் ஏசுநாதரைப் போன்று அருட் பணி தொடங்கினார். தம் அருள் வல்லபத்தால் பிணி தீர்த்தார். துயரம் போக்கினார். அருள் நெறியை உலகறிய விளக்கினார். ஜீவகாருண்யப் பிரசாரம் செய்தார். மக்களைப் பொய் வாழ்வினின்று மெய் வாழ்வுக்கு அழைத்தார். வடலூரில் தரும சாலையையும், தரும பாடசாலையையும் அமைத்தார். அன்பர் தந்த நிலத்தில் ஞானசபை மன்றம் நிறுவினார். கற்பூர ஜோதி வழிபாடு இயற்றினார். பின் மேட்டுக்குப்பத்தில் சித்திவிளாகத் திருமாளிகையில் சகஜ நிஷ்டையில் அமர்ந்தார். இக்காலத்தில்தான், (1867) அருட்பெருஞ்சோதி அவருள் இறங்கி உள்ளும் புறமும் ஒளிமயமானது. அந்நிலையில்தான், 'அருட்பா'வின் உயிரான அருட்பெருஞ்சோதி அகவல்' என்னும் நீண்ட பாடலும், சித்திவிளாகப் பகுதியைச் சேர்ந்த இதர பாடல்களும் எழுந்தன. இவை யாவும் அவருடைய பேரனுபவங்களையும் பேரின்பப் பெரு நிலையையும் மரணமிலாப் பெரு வாழ்வையும் ஆவேசத்துடன் விளக்குகின்றன. இவற்றில் அவர் கூறும் சில இன்ப மொழிகள் வருமாறு:—

தான் வந்து என்னுட் கலந்தான். தானே தான் நான் ஆனான். பொன் அணி பொற் சபையார் சிற்சபையார் என்னைப் புறம் புணர்ந்தார் அகம் புணர்ந்தார். புறத்தகத்தும் புணர்ந்தார். என் உடல் ஆவி ஈந்தேன் உள்ளன்போடு அவனுக்கு; எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும் இயல் உண்மை அறிவின் வடிவாகி நடிக்கும் மெய்ப் பொருளான் சிவம் ஒன்றே என்றிருந்தேன். அருட்சோதி தன் வடிவும் உருவும் பொருளும் அளித்து எனைத் தானாகப் புணர்த்தியது. திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும் செழும் பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே! ஊன் செய்த தேகம் ஒளி வடிவாகி நின்றோங்குகிறேன்; சாகா வரம் உவந்தளித்

தான். மரண நவை தீர்க்கும் கற்பம் கொடுத்தான். சாகாக் கலை கொடுத்தான். நானே தவம் புரிந்தேன் நம் பெருமான் அருளால்; நானே அருட் சித்தி நானடைந்தேன்; நானே அழியா வடிவம் அவை மூன்றும் பெற்றேன். எண்டகு சிற்றம்பலத்தே எந்தை அருள் அடையின், இறவா வரம் பெறலாம் இன்பமுறலாமே. சிறந்திடு சன்மார்க்கம் ஒன்றே பிணி மூப்பு மரணம் சேராமல் தவிர்த்திடும் காண். மரணத்தைத் தவிர்த்திடலாம், என்னோடு சேர்மின்; என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே.

ஆங்காரம் ஒழிந்தது; சனி தொலைந்தது; தடை தவிர்ந்தது; தயை மிகுந்தது; களி மிகுந்தது; ஒளி உற்றது; குறை அற்றது; நரையும் திரையும் அற்றன. அச்சமெலாம் தீர்ந்தது; எல்லா உயிர்களும் என் உயிர் ஆயின; மெய்ஞ்ஞான உரு அடைந்தேன்.

என்பால் அருட் பெருஞ் சோதி எய்தவே இன்பால் உலகங்கள் யாவும் விளங்கின. அண்டமும் அகிலமும் அருளாட்சி கொண்டன. பிணங்கள் எலாம் உயிர் பெற்றெழுந்தன. தெருட் பெரும் சித்திகள் நிகழ்ந்தன. மலம் கழிந்து உலகவர் வானவர் ஆயினர்.

நான் உரைக்கும் வார்த்தை எல்லாம் நாயகன் தன் வார்த்தை, நம்புமின்னோ நமரங்காள்; நற்குணம் இதுவே!

—"சுதேசமித்திரன்"


"ஆரம்பக்கல்வி"
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 10 ரூ. 2-50.

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:
25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# குழந்தைகள் விரும்பும் வர்ணங்கள்

## மன உற்சாகத்திற்கும் உற்பத்தி பெருக்கத்திற்கும் வர்ணங்களின் சேவை.

(கிருஸ்டா அபெல்)

கண்ணையும் கருத்தையும் கவரும் நிறங்கள் மனது உற்சாகப்படவும் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்யவும் உதவுகிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகள் ஊதா, சிவப்பு, ஆரஞ்சு, நீலம், மஞ்சள் ஆகிய நிறங்களையே விரும்புவதாக சமீபத்தில் நடத்திய மனோ தத்துவ 'சர்வே' யில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கண்டுபிடிப்பு குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாமான்களைத் தயாரிக்கவும் கின்டர் கார்டன் வகுப்புகளில் உபயோகிக்கும் பொருள்களைத் தயாரிக்கவும் மிகவும் உபயோகமாக இருக்கும்.

எஸ்ஸென் (டாட்)- குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமான வர்ணங்கள், ஊதா, சிவப்பு, சிவப்பு, ஆரஞ்சு, நீலம், மஞ்சள் ஆகியவைகளே. மேற்கு ஜெர்மன் நகரான எஸ்ஸெனில் வர்ண மனோ தத்துவ ஆராய்ச்சிக்கழகம் நடத்திய சர்வேயிலிருந்து இவ் விவரம் தெரிய வந்து உள்ளது.

ஏராளமான வர்ணங்களை வைத்து அவைகளிலிருந்து தங்களுக்கு இஷ்டமான நிறத்தைப் பொறுக்கி எடுக்கும்படி 5வயது முதல் 7வயது வரையுள்ள சுமார் 300 குழந்தைகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஏழு சதவிகிதம் பேர்தான் பச்சை வர்ணத்தை விரும்பினர். இந்த கண்டுபிடிப்பு இன்டர் கார்டன் பள்ளிகளுக்கு, குழந்தைகளுக்கு வேண்டிய கல்வி புகட்டும் விளையாட்டு சாமான்களை எந்த வர்ணங்களில் அமைக்கலாம் என்பது பற்றித் தீர்மானிக்க மிக உதவி இருக்கும்.

ஆசிரியர்கள் அணிந்து வரும் உடைகளின் வர்ணங்கள் கூட படிக்க வரும் சிறு குழந்தைகளின் கவனத்தைப் பெரிதும் கவருகிறதென்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. பழுப்பு நிற உடை உடுத்தி வரும் ஆசிரியை ஒருத்தியை இக்குழந்தைகளுக்கு கண்டாலே பிடிப்பதில்லை. அவளை "நாஸ்டி நானி" (அசுத்தமான நானி) என்று குழந்தைகள் பெயர் வைத்து அழைக்க ஆரம்பித்துவிட்டன. ஆனால் அதே ஆசிரியை குழந்தைகளுக்குப்பிடித்தமானநிறங்களில்உடையணிந்து வந்தபோது குழந்தைகளின் அன்பையும் ஆதரவையும் கவர்ந்துவிட்டாள்.

வயதானவர்கள் எந்த நிறங்களை விரும்புகிறார்கள் என்பது

பற்றியும் தகவல்கள் சேகரிக்கப் பட்டன. குழந்தைகள் விரும்பிய நிறங்களை எல்லாம் இவர்களும் விரும்பினார்கள். ஆனால் கறுப்பு, நல்ல பழுப்பு ஆகிய நிறங்களையும் இவர்கள் விரும்புவதாகத் தெரிய வந்தது. 'லைட்' (மெல்லிய) நிறங்கள் எதையும் இவர்கள் விரும்ப வில்லை.

எந்த நிறம் பிடிக்கிறது என்பதை கண்கள் மட்டும் தீர்மானிப்பதில்லை. மனமும் இதில் பங்கு கொள்கிறது. நிறங்கள் நரம்புகளை முறுக்கி விடக்கூடிய சக்தி வாய்ந்தவை என்பதையும் இந்த ஆய்வுகளை நடத்தியவர்கள் கண்டு பிடித்துள்ளனர். கண் தெரியாதவர்கள் கூட நிறங்களை உணர்ந்து தங்கள் விருப்பு வெறுப்புகளை வெளியிடக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

நிறங்கள் மனிதர்களைக் கவரக் கூடியது என்பது சென்ற சில வருடங்களாகவேதான் உணரப் பட்டு வந்திருக்கிறது. வீடுகளிலும், தொழில் செய்யும் இடங்களிலும் மனதை உற்சாக மூட்டும் நிறங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன. மனத் திருப்பிடித்த நிறங்களை அமைப்பதால் தொழிற்சாலைகளில் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு உற்பத்தி அதிகமாகிறது என்பதும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பனியன் தயாரிப்பு கம்பெனி இம்முறையைப் பின்பற்றிய தன் மூலம் தன் உற்பத்தியை 20 சதவிகிதம் அதிகரித்துள்ளது. ஆஸ்பத்திரிகளில் சஸ்திர சிகிச்சை நடைபெறும் இடங்களில் கூட கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் பச்சை நிறம் பூசப்பட்டு வருகின்றது. நோயாளிகளுக்கு மட்டுமின்றி டாக்டர்கள், நர்ஸ்கள் இவர்களுக்குக் கூட இந்த நிறம் தக்க மனோபாவத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. பச்சை பசைப் புலனில் ஆபரேஷன் செய்யும் சிவப்பு நிறமான இடம் பளிச்சென்று எடுத்துக் காட்டுவதாக இருக்கும். (யூ பி. எஸ்)

---

## அறிவுக் கதிர்

உலகத்தின் ஒரே ஒரு பகுதியைத்தான் நீ நிச்சயமாக முன்னேற்ற முடியும். அது எந்தப் பகுதி என்கிறாயா? உன்னுடைய உள்ளம் என்னும் பகுதி தான். ஐயமா அதிலே?

—ஆல்டஸ் ஹக்சிலி

மற்ற மனிதர்களிடம் இருப்பதைவிட அதிகமான மனிதத் தன்மை கவிஞர்களிடம் இருக்கிறது. அதனால்தான் அவர்களுடைய சொற்களுக்கு, ஏனையோரின் சொற்களுக்கு இருப்பதைவிட அதிகப் படியான செல்வாக்கு உண்டாகிவிடுகிறது

—தாமஸ் கார்லைல்

# நோபல் பரிசு

(எஸ். எஸ். என்.)

உலக மக்களின் நலனுக்காகப் பாடு படும் பெரியார்களுக்கு வருடா வருடம் வழங்கப்படும் நோபல் பரிசு 1895-ம் ஆண்டு, ஆல்பிரட் பெர்ன் ஹார்டு நோபல்என்னும் ஸ்வீடன் தேசத்துப் பெரியார் ஒருவரால் நிறுவப்பெற்றது. பரிசு வழங்குவதற்காக அளிக்கப்பட்ட மூலதனம் 90 லட்சம் டாலர்கள். இத் தொகையிலிருந்து வருடா வருடம் பெருகும் வட்டிப்பணமானது, பௌதிகம், ரசாயனம், மருத்துவம், இலக்கியம், உலக சமாதானம் ஆகிய ஐந்து துறைகளில் ஐந்து பரிசுகளாகப் பங்கிடு செய்யப்படுகின்றன. (சென்ற வருடம் வழங்கப் பட்ட பரிசு ஒன்றின் மதிப்பு 48 ஆயிரம் டாலர்கள் என்று சொல்லப்படுகிறது.)

1901-ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும் இப்பரிசு, இருமுறை நம் நாட்டு அறிஞர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இலக்கிய மேதை ரவீந்திரநாத தாகூர் 1913-ம் வருடத்திலும்; உலகப் புகழ் எய்திய மாபெரும் விஞ்ஞானியாகிய ஸர். ஸி. வி. ராமன் 1930-ம் வருடத்திலும் இப் பரிசைப் பெற்றார்கள்.

உயிரை அழிக்கும் சக்தி வாய்ந்த வெடி மருந்தைக் கண்டு பிடித்து, அதன் மூலம் சம்பாதித்த தனத்தை மக்களின் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு சேவை செய்பவர்களுக்குப் பரிசாக அளிக்க முன் வந்தார் ஆல்பிரெட் நோபல். அவர் வாழ்க்கையே ஒரு கதை.

இந்த நன்கொடையாளி ஸ்வீடன் தேசத் தலைநகராகிய ஸ்டாக்ஹோமில் 1833-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தன்னுடைய மற்ற சகோதரர்களைப் போல் இல்லாமல், இளமையிலிருந்தே சுகவீனமுற்று சதா தலை வலியால் துன்புறுவார். நோய்வாய்ப்பட்டு இருக்கும்போது இவரது அன்னையார் இவருடைய படுக்கையில் அமர்ந்து, இவருக்கு வீரச் செயல்கள் புரிந்த தீரர்களைப் பற்றிய கதைகளை எடுத்துரைத்து, இவரை உற்சாகப் படுத்துவார்கள். வயது வந்த பொழுது இவர் உள்ளம் கவர்ந்த காதலி ஒருத்தி இறந்து விடவே, இவர் ஆயுள் முழுவதும் பிரம்மச்சாரியாகவே காலங் கழித்தார்.

பதினேழு வயதானபொழுது கப்பல் கட்டும் தொழிலில் இவர் மிகுந்த ஊக்கம் காட்டியபடியால், இவருடைய தகப்பனார் இவரை அமெரிக்காவுக்கு அனுப்பி இத் துறையில் பயிற்சிபெற வாய்ப்புக கொடுத்தார். அமெரிக்காவில் எரிக்ஸன் என்னும் பெரிய விஞ்

ஞானியிடம் இவர் கல்வி கற்கும் போது, தன்து குருவின் பொருளாதார நிலையில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களைக் கண்டு மனம் நொந்து, தான் ஒரு நாள் மிகுந்த செல்வந்தனானல் தன் செல்வத்தை விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டார்.

அமெரிக்காவிலிருந்து ஒரு வருட காலங் கழித்து ஊர் திரும்பி, சில காலம் தன் தகப்பனாரின் தொழிற்சாலையிலும், ரஷ்யாவில் தனது சகோதரர்களின் தொழிற்சாலையிலும் மாறி மாறி வெடி மருந்து உற்பத்தி ஆராய்ச்சியில் ஈடுபடுவார். தற்செயலாக 1865-66—ல் தற்காலத்தில் "டைனமைட்" என்றுசொல்லப்படும் வெடிமருந்தைக் கண்டு பிடித்தார். இதில் அடங்கியிருக்கும் சக்தியை நன்கு உணர்ந்து, இதை உற்பத்தி செய்வதற்கு அநேக நாடுகளில் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு முயன்றார். விரைவில் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஸ்பெயின், பிரான்ஸ், ஸ்வீடன், இத்தாலி, அமெரிக்கா முதலிய நாடுகளில் தொழிற்சாலைகள் இயங்க ஆரம்பித்தன. அவற்றின் மூலம் இவருக்குப் அளவற்ற பொருளும் சேர்ந்தது. அப்பொழுது இவருக்கு வயது 40. உலக விஞ்ஞானிகள் யாவரும் இவருடைய ஆற்றலைக் கண்டு மகிழ்ந்து இவருக்குப் பாராட்டல்கள் அனுப்பினர்கள். ஆனல் பொது மக்கள் இவருடைய ஆராய்ச்சியில் பீதி கொண்டு நடு நடுங்கி, "நோபலின் சிருஷ்டி அரக்கர்கள் கையில் ஓர் நீண்ட சம்மட்டியை ஆயுதமாக அளித்து விட்டது" என்று கூறினர்கள்.

எவ்வளவு பணம் பெற்றிருந்த போதிலும், வரையற்ற அளவுக்கு விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் அபிவிருத்தி அடைந்திருந்த போதிலும், தனது வெற்றியினல் இவர் உள்ளம் கனியவில்லை. வாழ்க்கைத் துணைவியார் ஒருவர் தன்னுடன் பங்கு கொள்ள வில்லையே என்ற குறை இவரை சதா வாட்டியது. பாரிஸ் தினசரிப் பத்திரிகை ஒன்றில் தனக்கு ஒரு காரியதரிசி வேண்டுமென்று மறைமுகமாக விளம்பரம் ஒன்றைப் பிரசுரித்தார். பேரனஸ் பெர்தா வான் ஸட்னர் என்னும் ஒரு பெண்மணி இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனல், இப் பெண்மணி சில காலம் கழித்துத் திருமணம் செய்து கொண்டு பதவியை விட்டகன்றார்.

ஆகையால், ஆல்ஃபிரட் நோபல் ஆயுள்கால முழுவதும் தனிமையாகவே வாழ்க்கை நடத்த நேரிட்டது. இப்பெண்மணியார் பெருந்தகையுடன் நட்புகொண்டு அடிக்கடி இவரை வந்து காண்பது, கடிதங்கள் எழுதுவது முதலியவற்றின் மூலம் அவர் பால் கொண்ட தன்னுடைய அபிமானத்தை வளர்த்துவந்தார். இம் மாது எழுதி வைத்த நூலிலிருந்து நோபல் பார்வைக்கு

வசீகரத் தோற்றமில்லாதவர் என்றும், சராசரி உயரத்திற்குச் சற்று குறைந்தவர் என்றும், பன்மொழி பேசும் வல்லமை பெற்றவர் என்றும், தத்துவ ஞானி என்றும் தெரிய வருகிறது. ஆங்கில மொழியில் இவர் இயற்றிய ஒரு பெரிய கவிதை, மிகவும் பாராட்டற்குரியது என்று இவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

உலக வல்லரசுகள் 'போர்' என்னும்கருவியை அறவே ஒழித்திடல் வேண்டும் என்றும், உலகில் சமாதானம் நிலவுவதற்குச் சதா போராடல் வேண்டுமென்றும் இவர் வாழ்நாட்களில் வலியுறுத்துவார். இக் கருத்துக்களைக் கையாண்டு "உங்களது போர்க் கருவிகளைப் புறக்கணியுங்கள்" என்ற பெயர் கொண்ட ஒரு நூலை, பேரனஸ் பெர்தா அம்மையார் எழுதி வெளியிட்டார். இந்நூலுக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தன் வாழ் நாட்கள் முழுவதும் நோய் வாய்ப்பட்டிருந்த இப் பெரியார், 1796-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் தேதி தன் பூதவுடலை விட்டுப் புகழ் உடலை எய்தினர்.

—'ஆனந்தவிகடன்'

---

## தேன் துளிகள்

ஆடம்பரம் இரு வகையாகும். ஒன்று அறியாமையில் பிறப்பது. மற்றொன்று அறிவின் வக்கிரத்தில், ஏமாற்று வித்தையின் அம்சமாகப் பிறப்பது. நேர்மையாய், நீதியாய், நிதானமாய் வாழ்பவர்கள் ஆடம்பரத்தை விரும்பவே மாட்டார்கள்.

பசி படைத்தவன் வாய் உணவு வழங்கும் கரத்தை வாழ்த்தினாலும், அவன் வயிறு வழங்கப் பெறும் உணவைத்தான் போற்றும். பசி படைத்தவனது வாயை விட அவன் வயிறு தான் அதி முக்கியம்!

கண்ணொளி பெறாத குருடன் தடி பிடித்துத் தடுமாறுவான். உள்ளொளி பெறாத மனிதன் வெறி பிடித்துத் தடுமாறுவான்.

அதிகாரம் ஒரு பலம்; அதே சமயம் அது ஒரு பலஹீனம். பலம் வலுக்க வலுக்க, ஒருங்கே பலஹீனமும் பலப்படுகிறது.

கையேந்தி வாங்குகிறவர்களை விடக் கரம் நீட்டிக் கொடுப்பவர்களுக்குத் தான் ஈகைக் குணத்தைப் பற்றி அதிகம் தெரியும்.

பொய்யான உண்மைகள் நடைமுறை வாழ்க்கையில் நாம் காணுகின்ற பித்தலாட்டங்கள். உண்மையான பொய்கள் இலக்கியத்திலும் இதர கலைகளிலும் மின்னுகின்ற அற்புதங்கள்.

இந்த வாழ்க்கை வாழ வேண்டி, எத்தனையோ பேர்களின் உதவி ஒத்தாசைக்காக எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்கிறோம்! தெய்வ வாழ்க்கை வாழ்வதற்காகத் தெய்வத்தின் அருளை நாம் கேட வேண்டாமோ?

(நல்வழி.)

# கேட்டது சில, காசுகள்!

எமிலி சோலா! அவரது பெயரைக் கேட்டுச் சீமான்கள் நடுங்கினர். அவனது நூல்களை மக்கள் படிப்பதைக் கண்டு அரசினர் நிலை குலைந்தனர். அவனுடைய கருத்தோவியங்கள் ஏழை மக்களுக்குப் புத்துணர்ச்சியூட்டியது. வறுமையின் பிடிப்பால் தாழ்நிலையடைந்த ஏழையர் உலகம், அதனை உருவாக்கி சுகபோக வாழ்வு நடாத்திய சீமான்கள், அவர்களது ஆணைக்குட்பட்ட ஊழல் நிறைந்த அரசாங்கம்— பிரெஞ்சு நாட்டில் அநீதி தாண்டவமாடியது.

எமிலி சோலா எழுதிக்கொண்டேயிருந்தார். மனைவியையும் தாயாரையும் காப்பாற்ற வேண்டிய நிலை. ஒருவேளை உணவிற்கு வழியில்லை. சோலாவின் எழுத்துக்களை எவரும் மதிக்கவில்லை. குப்பையென சோலாவின் ஏடுகளைத் தள்ளினர் புத்தக வெளியீட்டாளர். வறுமையுடன் போராடியது சோலாவின் குடும்பம் ஆனால் சோலா தனது முயற்சியை விட்டு விடாமல், எண்ணத்தை மாற்றிக்கொள்ளாமல் எழுதிக் கொண்டேயிருந்தார்.

கடைசியாக 'சார்பெர்த்தியர்' என்ற புத்தக வெளியீட்டாளர் வந்து கொஞ்சப் பணம் தந்துவிட்டு சோலா எழுதித் தள்ளிய ஏடுகளை எடுத்துச் சென்றனர்.

அந்தப்பணம் சில நாட்களிலேயே தீர்ந்து விட்டது. வேறு வருவாய்க்கு வழியில்லை. சோலாவின் மனைவி, சார்பெர்த்தியரிடம் சென்று ஏதாவது கிடைக்குமாவென அறிந்துவர சோலாவை வற்புறுத்தினாள், பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லையென்றாலும் மனைவியின் வற்புறுத்தலின் பேரில் சார்பெர்த்தியரைக் காணச் சென்றார்.

பலத்த காற்றுடன் நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. ஒரு கிழிந்த குடையுடன் போராடிக் கொண்டே நடந்து சென்றார் சோலா.

சார்பெர்த்தியர் புத்தகக் கடையில் சோலா நுழைந்தபோது, அவரை யாரும் கவனிக்கவில்லை. அங்கிருந்த கூட்டத்திற்கு அவர்தான் சோலா என்பது தெரியாது. தனது புத்தகங்கள் விற்பனையாகிக் கொண்டிருப்பதை சோலா பார்த்தார். பலர் வேறு புத்தகங்களைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு ரகசியமாக சோலாவின் புத்தகத்தை வாங்கி மறைத்துக்கொண்டு சென்றனர். திகைப்புடன் நின்ற சோலா சார்பெர்த்தியரிடம் சென்றார். சோலா வந்திருப்பதை அப்போதுதான் சார்பெர்த்தியர் கண்டார்.

சோலா தயங்கிக் கொண்டே பேச ஆரம்பித்தார்.

"சார்...!சார்! உங்களால் இன்னும் கொஞ்சம் காசு கொடுக்க முடியுமா?"

சார்பெர்த்தியர் பெருஞ் சத்த மிட்டு, சிரித்துக்கொண்டே தன் மனைவியிடம் திரும்பி,

"பார்த்தாயா! சோலா இன்னுங் கொஞ்சம் காசு கொடுப்பீர்களாவெனக் கேட்கிறார்" என்றார்

சோலாவின் முகம் வாட்டமடைந்தது.

"மிஸ்டர் சோலா! இந்தக் கவரை உமக்கு அனுப்புவதாக இருந்தேன்."

நடுக்கத்துடன் அந்தக் கவரை சோலா வாங்கினார். உள்ளே பணம் இருப்பதற்கான அறிகுறிகள் ஏதும் இல்லை. ஏமாற்றத்துடனேயே அதைப்பிரித்தார்.

18000 பிராங் பணத்திற்கு ஒரு 'செக்' அதில் வைக்கப்பட்டிருந்தது!

சோலாவின் முகத்திலே ஏற்பட்ட வியப்பைக் கண்டு சார்பெர்த்தியர் மகிழ்ந்தார்.

"மிகவும் நன்றி! மிகவும் நன்றி!" என்று கூறிவிட்டு, பரபரப்புடன் சோலா திரும்பினார். ஆனால் மேற் செல்லவில்லை. மறுபடியும் வந்தார்.

"சார் ஏதாவது சில்லறை இருந்தால் கொடுங்கள்!"

சார்பெர்த்தியர் பையில் கைவிட்டுக் கிடைத்த சில்லறைகள் அவ்வளவையும் சோலாவிடம் தந்தார். மறுபடியும் நன்றியைத் தெரிவித்துவிட்டு வெளியேறினார் சோலா.

அந்த 'செக்'கைவிட சில்லறைகள் தான் அந்த நேரத்தில் சோலாவிற்கு, மிகமிக மதிப்புள்ளவையாகத் தெரிந்தன.

'மன்றம்'

---

## அறிவுக் கதிர்

நாம் வேண்டுவதென்ன? இரத்தத்தில் பலம். நரம்புகளில் வலிவு. இரும்பு போன்ற தசை நார்கள். இவைகளே நமக்கு வேண்டும். தளர்ச்சியைத் தருகின்ற கசிவுமிக்க கொள்கைகள் நமக்குத் தேவையில்லை.

—விவேகாநந்தர்

உபநிடதங்களின் மகிமைபற்றிப் பேசுகிறோம். மகரிஷிகளின் சந்ததிகள் நாம் என்று பெருமை கொள்கிறோம். ஆயினும் என்ன பயன்? மற்ற நாட்டாருடன் ஒப்பிடும்போது நாம் பலவீனர்களாகவே இருக்கிறோம், ஏன்?

—விவேகாநந்தர்

# ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கம்

---

*பழனித்தாலுகா ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கம் 2–2-1963 ஆம் தேதி, பழனியில் கூடிய சிறப்புக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள்.*

**தீர்மானம் :—1.** இந்திய மண்ணின்மீது வலுவில் தாக்குதல் நடத்தி பகைமை நோயை வளர்க்கும் போக்குடன் செயலாற்றிவரும் சீனர்களது செயலை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், நாட்டின் நலனைக் காக்க அரசினர் எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறத் தன்னாலான தியாகங்கள் அனைத்தையும் புரியக் கொண்டிருக்கும் உறுதியை இக்கூட்டம் தெரிவித்துக்கொள்ளுகிறது.

**தீர்மானம் :—2.** ஓய்வு பெற்ற ஆசிரியர்களது நலனில் அரசாங்கம் காட்டிவரும் அக்கறைக்காக இக்கூட்டம் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது. இத் தொடர்பாகத் தமிழ் நாடு மாநில சட்ட சபையில் 1962 ஜூலை மாதம் 24 ஆம் தேதி கனம் நிதி அமைச்சரவர்கள், ஆசிரியர்களது பென்ஷன் விதிகள் மாற்றியமைக்கப்படும் என அறிவித்ததற்கும், 1962 மே 27ஆம் தேதி கோவையில் பேட்டிகண்ட குழுவிற்குக் கல்வி அமைச்சர் ஆசிரியர்களது பென்ஷன் உயர்த்தப்படத் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்வதாக உறுதி கூறியதற்கும் இக்கூட்டம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது.

**தீர்மானம் :—3.** ஓய்வு பெற்ற ஆசிரியர்களது நலனில் அரசாங்கத்தின் ஆவலை விரைவில் நிறைவேற்ற உதவும் வகையில் 1962 ஆகஸ்ட் 1-ஆம் தேதியன்று "எல்லா ஆசிரியர்களது பென்ஷனிலும் தற்காலிகமாக ரூபாய் 10 உயர்த்தப்பட வேண்டும் எனவும், குறைந்தபட்ச பென்ஷன் ரூபாய் 20 ஆக இருக்கும் வகையில், விதிகளைத் திருத்தியமைக்கவேண்டும் என்றும், தீர்மானம் கொண்டு வந்து பேசிய வித்துவான் திரு.டி.முத்துக்கண்ணப்பர் அவர்கட்கும், 31–12–62ல் மதுரையில் கூடிய தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி மாநாட்டில் "தற்போது வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 20 ஆகவும், உரிய பஞ்சப்படியும், வழங்கப்படும் வகையில் விதிகள் இயற்றப்படல் வேண்டும்" எனத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய மேல்சபை உறுப்பினர் திரு. A. ராஜா ஐயர் அவர்களுக்கும் இக்கூட்டம் ஆழ்ந்த நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறது.

**தீர்மானம் :—4.** தமிழ் நாட்டில் ஓய்வு கால உதவி பெறும் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் பெறும் உதவித்தொகை ரூபாய் 6, 8 என்ற அளவிலேயே உள்ளது. வாழ்க்கைத் தேவைகளை இச்

சிறு தொகையின் உதவிகொண்டு நிறைவேற்றுவது மிகக் கடினமாக உள்ளது. ஆகவே ஆசிரியர்களது ஓய்வுகால ஊதியத்தைக் கணிசமாக உயர்த்திக் குறைந்த பட்ச பென்ஷன் ரூ. 20 அளிக்கப்படும் வகையில் விதிகள் இயற்ற, தமிழ்நாடு கனம் முதல் அமைச்சர் அவர்களையும், கனம் கல்வி அமைச்சர், கனம் நிதி அமைச்சர், தமிழ்நாடு கனம் கல்வி இயக்குநர் ஆகியவர்களையும் இக்கூட்டம் பணிவுடன் வேண்டுகிறது. இத்துடன் தொடர்பாக இச்சங்கத்தினரிடமிருந்து 16–7–62 ஆம் தேதி தமிழ்நாடு மாநில கனம் அமைச்சரவர்களுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பமும், இதன் மூலம் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகிறது.

**தீர்மானம் :—5.** தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர நிலை காரணமாக, அரசாங்கம் அமைத்துக் கொண்டுவரும் தொண்டர் படைகளில், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் போதிய பங்கு ஏற்பதுடன், பொது மக்களுக்கு நிலவரங்களைத் தக்க முறையில் எடுத்துச் சொல்லவும், பொய்ப்பிரசாரங்களை அகற்றவும், முழுமூச்சுடன் பணியாற்ற, இச்சங்கம் முடிவெடுக்கிறது.

தேசிய தற்காப்பு நிதிக்கு இச்சங்கத்தின் அங்கத்தினர்களால் ரூ. 10 (ரூபாய் பத்து) தமிழ்நாடு முதல் மந்திரி கனம் K. காமராஜ் அவர்களுக்கு அனுப்ப ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

புதாயக்குடி,<br>4-2-'63

K. விஜயகிரிவேலாயுதசாமி,<br>காரியதரிசி.

---

## தமிழ்நாடு கல்வி இயக்குனர்

## பத்ம ஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேல் M.A., L.T.

அவர்களிடம் 27–1–'63-ல் கும்பகோணத்திற்கு அன்னார் விஜயம் செய்த போது தஞ்சை மாவட்ட உதவிபெறும் ஆரம்பப்பாடசாலைநிருவாகிகள் சங்கச் சார்பாகத் தலைவர் K. ரெங்கஸ்வாமி அய்யங்கார் சமர்ப்பித்த விண்ணப்பம்.

1. உதவிபெறும் ஆரம்பப்பள்ளி நிருவாகிகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும் நிருவாகக்கொடை கணக்கிடுவதற்கான செலவினங்களின் விபரம் இலாக்காவினரால் நிருவாகிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதில் செலவினங்கள் ஒவ்வொன்றிற்கும் அனுமதிக்கப்படும் உயர்ந்த பட்சத்தொகை எவ்வளவு என்பதைத் தெரியப்படுத்துமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

2. தற்போது வெளியிடப்பட்டுள்ள Edn - P. H. Memo 39872-58/62 Edn. 21-7'-62-ன் படி ஆசிரியர் மாணவர் விகிதம் 1:35 என்று நடைமுறைக்கு வருமானால் தனிப்பட்ட கவனத்தை ஆசிரியர்கள், மாணவர்கள் மீது செலுத்த முடியாத நிலை ஏற்பட்டு ஒரு ஆசிரியர், ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளைக் கவனிக்கவேண்டி வருவதால் தேர்ச்சி பெருமளவில் பாதிக்குமென அஞ்சுகிறோம். எனவே எங்கள் இராச்சிய ஆசிரிய நிருவாகிகள் சங்க மாநாட்டில் ஏற்கனவே தீர்மானித்துக் கேட்டுக்கொண்டவாறு ஆசிரியர் மாணவர் விகிதம் 1:25 என்று இருக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

3. தற்சமயம் ஆரம்பப் பள்ளியில் ஆங்கிலம் போதிக்க செகண்டரி கிரேடு ஆசிரியரை அனுமதித்து இருப்பது போல் உயர்தர ஆரம்பப்பள்ளியிலும் 4, 5 வகுப்புக்களுக்கு ஆங்கிலம் போதிக்க வேண்டி வகுப்பு ஆசிரியராக செகண்டரி கிரேடு ஆசிரியரை நியமிக்க அனுமதியளிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

4. ஆரம்பப்பள்ளிகளுக்கு ஆங்கில போதனைக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதன் மூலம் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள புதிய ஆசிரியர் மாணவர் விகிதத்தினால் அப்பள்ளிகளில் உள்ள ஹயர் கிரேடு ஆசிரியர்கள் நிருவாகிகளாகவும் இருப்பதால் அவர்கள் வேலை இழக்க நேரிடுகிறது. எனவே ஆசிரிய நிருவாகிகள் பள்ளிகளிலேயே தொடர்ந்து பணி ஆற்றுவதற்கு அனுமதி அளிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

5. உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளில் கல்வி இலாகா அதிகாரிகளின் முன் அனுமதிபெற்று நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட, கற்பிப்புக்கொடை (Teaching grant) ஆண்டு இறுதியிலோ அல்லது அதன் பின்னரோ தணிக்கை செய்யப்பட்டு நியமனம் சரியல்ல எனக்கூறி அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகையைத் திரும்பக்கட்டும்படி நிருவாகிகள் வற்புறுத்தப்படுகிறார்கள். இந்நிலை ஏற்படாதிருக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

K. அரங்கசாமி அய்யங்கார்

தலைவர். (செம்போடை)

# இன்பம் வேண்டுமா...?

கீழ்க்கண்ட பன்னிரண்டு விதிகளும் இன்பத்துக்கென்று ஏற்பட்டவை :—

1. வாழ்வில் எளிமை துலங்க வேண்டும். பழக்கங்கள் அளவை மீறாத மிதத்தோடு இருக்கவேண்டும்.

2. செலவு வருவாயைக் காட்டிலும் குறைவாக இருக்க வேண்டும். மனத் திருப்தி அவசியம். கடன், உடன், என்று ஒன்றுமே இருக்கலாகாது. சிக்கனம் பயில வேண்டும்.

3. நினைவெல்லாம் ஆக்க நினைவாக இருக்கவேண்டும். தெளிவும் உண்மையும் துலங்கச் சிந்தனை புரியப் பழகிக்கொள்வது அவசியம். நெஞ்சில் பயனுள்ள நினைவுகளை நிரப்ப வேண்டும். மனக் கதவுக்கு அருகில் விழிப்போடு காத்திருத்தல் அவசியம்.

4. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும். "நம் இஷ்டப்படிதான் எல்லாம் நடக்கவேண்டும், இருக்க வேண்டும்" என்கிற சாதாரணப் போக்கு உதவாது.

5. நெஞ்சில் நன்றி உணர்ச்சி வேண்டும். நமக்கு அளிக்கப் பட்டுள்ள வாய்ப்புக்கள், நம் திறமைகள், நம் வசதிகள் இவற்றை ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும் எண்ணிப் பார்த்து இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

6. மனம் போன போக்கெல்லாம் போகாமல், இந்த மனசைக் கட்டுப்படுத்துதல் அத்தியாவசியம். நெஞ்சில் சதா காலமும் அமைதியும், "நன்மை எங்கும் நிலவுக" என்கிற சிந்தனையும் துலங்க வேண்டும்.

7. தாராளமாகப் பிறருக்குக் கொடுக்க வேண்டும். பிறர் மகிழ்வதைக் கண்டு மகிழ்வது போன்ற இன்பம் பிறிதொன்று இல்லை.

8. சரியான, நேரான நோக்கத்தோடு வேலை செய்ய வேண்டும். இறைவனிடம் வேண்டிக்கொள்வதும் இந்த அடிப்படையில் நிகழவேண்டும்.

9. மற்றவர் சுகத்தில் அக்கறை வேண்டும். சுய நலப் போக்கில் செல்லும் மனத்தைத் திருப்பி, நல்வழி வகுத்துச் செலுத்த

(39—ம் பக்கம் பார்க்க)

# தகுதியுள்ளோர் உயர் கல்வி பெற உதவப் புதுத் திட்டம்

## பல்வேறு படிப்புக்கேற்ப ரூ. 720 முதல் 1,500 வரை கடன் கிடைக்கும்

### படிப்பு முடிந்ததும் ஆசிரியர் தொழிலை மேற்கொள்வோருக்குச் சலுகை

*தேவையுடைய தகுதியுள்ள மாணவர்கள் உயர்தரக் கல்வி பெற நிதி உதவியளிப்பதற்காகப் புதிய கடன் உபகாரச் சம்பளத் திட்ட மொன்றை யூனியன் கல்வி இலாகா ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின்படி அடுத்த மூன்று ஆண்டுகளில் 70,000 மாணவர்கள் அனுகூலமடைவர்.*

பண உதவி தேவைப்படும் தகுதியுள்ள மாணவர்களுக்கு உதவுவதற்கான இத்திட்டத்தில், ஆசிரியர் தொழிலை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு ஊக்கமளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது திட்டத்தின் பாக்கியுள்ள காலத்தில் இந்தத் திட்டத்தை அமல் நடத்த ரூ. 9 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. 1963–64–நிதியாண்டிலிருந்து இது அமல் நடத்தப்படும்.

1963-64–ல் 18000 உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும். இத் திட்டம் சம்பந்தமான விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு அறிவிக்கப்படும்.

### திட்ட விவரம்

இந்தத் திட்டத்தின்படி மாதம் ரூ. 500–க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் பெற்றோரின் பையன் அல்லது பெண்ணுக்குக் கடன் கிடைக்கும். கல்வி இலாகாவின் தேசிய உபகாரச் சம்பளத்தைத் தவிர வேறு எந்த உபகாரச் சம்பளத்தையும் ஏற்கனவே ஒரு மாணவர் பெற்றுக் கொண்டிருப்பதானது, இந்த புதுத் திட்டத்தின்படி கடன் பெறுவதைப் பாதிக்காது. எனினும் கடன் தொகையை நிர்ணயிப்பதில் ஒரு மாணவர் ஏற்கனவே பெற்றுக் கொண்டிருக்கும் உபகாரச் சம்பளத்தின் தொகை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

ஒருவர் ஒரு ஆண்டில் அதிகபட்சமாகப் பெறக் கூடிய கடன் தொகை, படிப்புக்குத் தக்கபடி மாறும். கடன் தொகை ஒரு ஆண்டுக்கு ரூ. 750 லிருந்து ரூ. 1500க்குள் இருக்கும். ஆனால் எஞ்சினீயரிங், இதர தொழில் படிப்பு மாணவர்கள் விஷயத்தில்

இந்த வரம்பு ரூ. 250 அதிகரிக்கப்படும்.

## வட்டியில்லாக் கடன்

கடன் பெற்ற மாணவருக்கு வேலை கிடைத்த தேதியிலிருந்து ஒரு ஆண்டுக்குப் பிறகு மாதாந்தர தவணைகளில் கடன் தொகை வசூலிக்க ஆரம்பிக்கப்படும். மாதா மாதம் நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிகளில் கடன் தவணைகள் திருப்பிச் செலுத்தப்பட்டால், வட்டி கிடையாது. ஆனால் குறித்த தேதியில் செலுத்தாவிடில் வட்டியுண்டு. மைனர்கள் தவிர மற்றவர்கள் விஷயத்தில் ஜாமீன் எதுவும் இல்லாமலேயே கடன் கொடுக்கப்படும்.

## ஆசிரியர் தொழிலை மேற்கொள்பவருக்குச் சலுகை

தங்களுடைய படிப்பு முடிந்தவுடன் ஆசிரியர் தொழிலை மேற்கொள்ளும்மாணவருக்கு சலுகை யளிப்பது இத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். அவர்கள் விஷயத்தில் அவர்கள் ஆசிரியர் தொழிலில் சேவை புரிந்த ஒவ்வொரு ஆண்டுக்கும் கடன் தொகையில் பத்திலொரு பகுதியை வசூலிப்பது நிறுத்திவைக்கப்படும். இவ்விதமாக 10 ஆண்டுகாலம் சேவைபுரிந்த ஒரு ஆசிரியர் கடனைத் திருப்பச் செலுத்த வேண்டியதில்லை.

இந்தத் திட்டத்தின் அமல் பற்றி ஆலோசனை கூற தேசிய ஆலோசக போர்டொன்றை மத்திய சர்க்கார் நிறுவுவர். ராஜ்யங்களிலும் இதுபோன்ற போர்டுகள் அமைக்கப்படும்.

---

(37-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். ஈகை, சேவை, சகாயம் இவற்றில் எந்த அளவுக்கு ஈடுபடுகிறோமோ, அந்த அளவுக்கு இன்பம் நிச்சயம்.

10. நேற்று, நாளை என்கிற கவலைகள் இல்லாமல் இன்றைய வாழ்வை நன்றாக, முழுதாக வாழவேண்டும். எதிரில் நிற்கும் வேலையில் முழுக் கவனம் செலுத்தி, உழைக்க வேண்டும்.

11. உற்சாகமூட்டும் உல்லாசப் பொழுதுபோக்கு ஏதாவது இருப்பது அவசியம்.

12. தெய்வத்துக்கு அருகில் இருக்க வேண்டும். இந்தத் தெய்வத் தொடர்புதான் உண்மையான, நிரந்தரமான இன்பத்துக்கு அடிப்படை.



1882ல் ஏ. ஆர். சி. துவக்கப் பள்ளியை ஸ்தாபித்த காலஞ் சென்ற திரு. ஏ. இராமான்ஜிலு செட்டியார்.



ஏ. ஆர். சி. பள்ளிகளை நிர்வாகித்துவரும் திரு. கே. இராமய்ய செட்டியார்

# ஏ. ஆர். சி. துவக்கப்பள்ளி முத்துவிழா

## 21-2-1963

---

சென்னை முத்தியாலுப்பேட்டை ஏ. ஆர். சி. துவக்கப்பள்ளி முத்துவிழா உயர்திரு. டாக்டர் பி. வி. இராசமன்னார் அவர்கள் (முன்னாள் பிரதம நீதிபதி) தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. முத்துவிழாவிற் கென்று சைவ முத்தையா முதலித் தெருவில் உள்ள திறந்த அரங்கில் அழகிய பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. விழாத்தலைவர் டாக்டர் பி. வி. இராஜமன்னார் அவர்களைப் பள்ளிச் சிறுமியர் பூரண கும்பத்துடன் மலர்தூவி இசைபாடி வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

விழாத்தலைவர் அவர்களையும் ஏனைய பெருமக்களையும் பள்ளி நிருவாகசபையின் தலைவர் திரு. கே. வேங்கடசாமி நாயுடு அவர்கள் பள்ளியின் திறமையான சேவைகளைப் பாராட்டி வரவேற்புரை நிகழ்த்தினர்.

ஏ. இராமான்ஜலு செட்டியார் துவக்கப்பள்ளி முத்து விழாவிற்காகப் பள்ளிச் சிறுவர், சிறுமியர் திறந்தவெளி அரங்கில், 1. பூஜை நடனம், 2. ஆங்கிலத்தில் "பழைய அரசன்", 3. வாழ்த்து நடனம், 4. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் வாழ்வில் ஒரு காட்சி, 5. பள்ளி வளர்ந்தவகை, 6, ஆண்டாள் கனவு (நாட்டிய நாடகம்) முதலிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பள்ளியின் செயலாளர் திரு. இராமய்யச் செட்டியார் அவர்கள் பள்ளியின் அறிக்கையைப் படித்தார். அறிக்கையில் அவர் கூறிய தாவது: ஏ. இராமானுஜலு செட்டியார் துவக்கப்பள்ளி 1882–ஆம் ஆண்டில் நான்கே மாணவர்களைக்கொண்டு தொடங்கப்பட்டது. 1912–ல் 156 மாணவர்களாய்ப் பெருகி, 1920–ஆம் ஆண்டுவரை மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. பள்ளியின் நிருவாகத்தை, தனது மாமனார் 1921–ல் தன்னிடம் ஒப்படைத்த பின்னர், மெல்ல உயர்நிலைத் துவக்கப்பள்ளியாகவும், பின்னர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகவும் வளர்ந்தது. 1944–ல் பெண்களுக்கு எனத் தனிப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டது. மேலும் 1944–ல் மணிவிழா நடைபெற்றது. இத்துணை முன்னேற்றமும் இப்பேட்டையின் பெரு மக்கள் ஆதரவாலும் எமது நிருவாகச்சபையினாலும் ஆகும். தலைவர் கே. வெங்கடசாமி நாயுடு, துணைத்தலைவர் எஸ். ஜி. ரங்கராமானுஜம் அவர்களின் சேவைகளை இச்சந்தர்ப்பத்தில் மறக்கவியலாது. மேலும் எனது துணைவி தனக்குச் சொந்தமான மூன்று மாடியுள்ள "ஸ்ரீ நிவாஸ்" என்னும் பெரிய வீட்டினைத் தந்து உதவினார். இன்று 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர் எனப் பல குறிப்புகளை அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

பின்னர் பள்ளியின் துணைச் செயலாளர் திரு. பி. பத்மாவதி அம்மையார், பி. எஸ்ஸி. பி. டி, அவர்கள்; ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன், கவர்னர் திரு விஷ்ணுராம்மேதி, இந்திய அரசாங்க அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர், திரு. தெ. து. சுந்தரவடிவேலு, நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர், கல்வி மந்திரி எம். பக்தவத்சலம், மேயர் திரு. குசேலர் முதலிய அறிஞர் பெருமக்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்கள்.

முத்துவிழாத் தலைவர் டாக்டர் பி. வி. இராஜமன்னார் அவர்கள் பள்ளியின் சேவைகளைப் பாராட்டிப் பேசியதாவது: ஒரு சாதாரண நிலைமையில் இருந்த ஒருவரால் சில மாணவர்களைக்கொண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளி ஒரு தனியாரின் விடா முயற்சியாகும். அது இன்று நாம் அனைவரும் பாராட்டும் வகையில் சிறப்பாக வளர்ந் துள்ளது. ஆரம்பக்கல்விதான் மிகமிக முக்கியமானது; சென்ற சிறிதுகாலமாக இதில் நினைத்தபடியெல்லாம் மாறுதல்கள் செய்து வருகிறோம். இதனால் ஏற்பட்டுள்ள தீய விளைவுகள் பல. கூடிய விரைவில் உருப்படியான முற்போக்கான திட்டம் வகுக்கப்பட்டு உண்மையாய் வளர்ச்சிபெறும் என்று நான் நம்புகிறேன். திரு. இராமய்யச்செட்டியார் தன்னிடத்தில் உள்ள சொத்தில் இரண்டு லட்சத்தை ஒதுக்கி வருமான வரியில் தப்பித்துக்கொள்வதற்காகத்

துவக்கப்பட்ட பணியல்ல இது. திரு. இராமய்யச் செட்டியார் பணக்காரர் அல்லர். கல்விப்பணியில் உள்ள ஊக்கத்தால் இங்ஙனம் நாமெல்லாம் கண்டுகளிக்கும் வண்ணம் முன்னேற்றம் அடைந்துள்ளது. உண்மையிலேயே இப்பள்ளியின் முத்துவிழாவில் நான் கலந்துகொள்வதில் பூரிப்படைகிறேன்,” என்று தனது உரையில் கூறி அகல் விளக்கால் 80 என்ற வடிவில் அமைக்கப்பட்ட ஒளி அமைப்பினை மின்விசைப் பித்தானை அழுத்தி முத்துவிழாவினைச் சிறப்பித்தார்.

முத்துவிழா கூட்டுச் செயலாளர்களில் ஒருவராகிய திரு. டி. நீலகண்டன் அவர்கள், முத்துவிழா மலரினை விழாத்தலைவர் டாக்டர் பி. வி. இராஜமன்னார் அவர்களிடம் அளித்தார்.

திருவாளர்கள் டாக்டர் மணவாள இராமானுஜம், சச்சிதானந்தம் பிள்ளை, முன்னாள் மேயர் சீனிவாசன், டாக்டர் நரசிம்மன், சந்தான கிருஷ்ண நாயுடு, சரஸ்வதி பாண்டுரங்கம், எம். எல். சி., பல பள்ளி நிருவாகிகள், பல பள்ளியின் தலைமை ஆசிரியர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள் வருகை தந்திருந்தது குறிப்பிடத் தகுந்தது.

மகளிர் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. கெ.சகுந்தலா அம்மையார், பி. எஸ்ஸி. பி. டி., அவர்கள், தனக்கே உரித்தான இனிய தமிழ்நடையில், பள்ளியைத் துவக்கிய ஏ. இராமான்ஜலு செட்டியார் அவர்களின் சீரிய முயற்சியையும் அவரது மருகர் கெ. இராமய்ய செட்டியார் அவர்களது விடாமுயற்சியையும் பாராட்டி விழாவிற்கு வந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றிகூற, இனிய தேசிய கீதத்துடன் விழா முடிவடைந்தது.

---

## அறிவுக் கதிர்

வளர்ச்சியைத் தடுக்கும் தீயசக்திகளை ஒடுக்கும் பொருட்டே புரட்சி புகுகிறது. புரட்சி ஓர் இடத்தில் புகுகிறது எனில் அவ்விடத்தில், வளர்ச்சிக்குக் கேடு சூழும் தீய சக்திகள் தலைவிரித்தாடுகின்றன என்றே பொருள்.

—திரு. வி. க.

சோற்றுப் பானையே நமது கடவுள்—என்னைத் தொடாதே நான் பரிசுத்தன் என்பதே நமது சமயம். இன்னும் ஒரு நூற்றாண்டு இவ்வழியே நாம் செல்வோமாயின் நாம் பைத்தியக்காரர் விடுதியையே அடைவோம்.

—விவேகாநந்தர்

# 65 வயதுக்கு மேல்தான் வேலை!

வேலை பார்ப்பவர்களுக்கு 55 வயது முடிந்து விட்டால், ஓய்வு கொடுத்து வீட்டுக்கு அனுப்பி விடுகிறார்கள். சில இடங்களில் 60 வயது வரைகூட வைத்துக் கொள்கிறார்கள் அதற்கு மேல் எவரையும் வேலையில் வைத்துக் கொள்ள யாரும் விரும்புவதில்லை

அமெரிக்காவில் **கலிபோர்னியாப் பல்கலைக் கழகச் சட்டக் கல்லூரியில்,** இந்த விதி—55 வயதில் வேலையை விட்டுப்போக வேண்டும் என்பது கிடையாது. அந்தக் கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்படுவதற்கு இருக்கும் கட்டுப்பாடுகளில் ஒன்று அவருக்கு 65 வயது முடிந்திருக்க வேண்டுமென்பது ஆகும்!

மற்றக் கல்லூரிகளில் ஓய்வு பெறுகிற பேராசிரியர்கள் இந்தக் கல்லூரிக்கு வருகிறார்கள். வயது ஆக ஆக ஏதாவது குறைபாடுகள் மற்ற துறைகளில் மட்டும் இருக்க வயது ஆகஆக ஆசிரியர்களின் அறிவும்திறமையும் அதிகப்பட்டுக்கொண்டே போகின்றன. 55 வயதிலோ, 60 வயதிலோ, ஒருவர் கல்லூரியை விட்டு விலகும் பொழுது, அவருடைய முதிர்ந்த அறிவும் அனுபவமும் இன்னும் பயன்படக் கூடிய நிலைமையிலேயே இருக்கின்றன. அவ்வாறு பயன்படக்கூடிய திறமையைக் கலிபோர்னியாப் பல்கலைக் கழகம் திரட்டத் தீர்மானித்தது.

1940-ல், சண்டைக் காலத்தில் வயது வந்தவர்கள்போர்க்காரியங்களிலும் மற்ற துறைகளிலும் தேவைப்பட்டதால், ஓய்வு பெற்ற பேராசிரியர்களை அழைத்துக் கொள்ளத் திட்டமிட்டார்கள். 60 வயதுக்கு மேற்பட்டவர்களால் சரியாகப் பணியாற்ற முடியாது என்று சிலர் அப்பொழுது குறை சொன்னார்கள்.

இப்பொழுது 60 வயதுக்கு மேற்பட்டவர்களை ஆசிரியர்களாகக் கொண்ட அந்த சட்டக் கல்லூரி, நல்ல புகழுடனே விளங்குகிறது. அறிவாலும், அனுபவத்தாலும் கனிந்த அந்த முது பெரும் ஆசிரியர்களிடம் கல்விகற்க மாணவர்கள் மிகவும் ஆவலுடன் வருகின்றனர். கலிபோர்னியாப் பல்கலைக் கழகச் சட்டக்கல்லூரியில் இருக்கும் 12 பேராசிரியர்களில் பெரியவராக இருப்பவருக்கு வயது 82! ஏடுகள் தருகிற வார்த்தைகளைவிட, இத்தப் படுகிழங்கள் சொல்கின்ற வாசகங்கள், உணர்ச்சியோடும் அனுபவத்தோடும் வெளிவருகின்றன! மாணவர்கள் மிகுந்த பணிவுடன் அவற்றைக் கேட்கின்றனர்.

ஊதியம் கேட்காமலேயே பல பேராசிரியர்கள் அங்கு வருகின்

றனர். "சொல்லிக் கொடுப்பது எங்கள் வேலையல்ல! அது ஒரு வேடிக்கை, பொழுது போக்கு! ஒவ்வொரு மணி நேரத்தையும் நாங்கள் குதூகலத்துடன் செலவழிக்கிறோம்!" என்று அங்குள்ள பேராசிரியர் **எவரெட் பிசேர்** என்பவர் கூறுகிருர். அவருக்கு வயது 78!

மற்றக் கல்லூரிகளில், தங்களை விட வயதில் குறைந்தவர்கள் செய்வதைவிட, அதிகமான வேலையை இந்தக் கல்லூரிப் பேராசிரியர்கள் செய்கிருர்களாம். கல்லூரி வேலைகளுடன் தங்கள் பழைய புத்தகங்களைத் திருத்துதல், புது வெளியீடுகளை வெளியிடுதல், இப்படி நேரத்தைச் செலவழிக்கின்றனர். பெரும்பாலும் உபயோகிக்கப்படும் புத்தகங்கள், அந்தப் பேராசிரியர்களால் எழுதப்பட்டவைகளாக இருக்கும்.

மாணவர்களுக்குக் கடுமையான பாடத்திட்டங்களும் வேலைகளும் இருக்கின்றனவாம். இந்தப் பழம் "பெருச்சாளிகளை" ஏமாற்ற அவர்களால் முடிவதில்லை.

ஒவ்வொரு பேராசிரியரும் 120 மாணவர்கள் கொண்ட வகுப்புகளை எடுத்துக்கொள்கிருர்கள். அந்தப் பேராசிரியர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு மாணவர்கள் கஷ்டப்பட்டு உயரவேண்டும்; இல்லையானல் மறு ஆண்டு வெளியேறி, வேறு இடம் போக வேண்டியதுதான்.

100-க்கு நாற்பது பேர்கள் தான் தேர்ச்சி பெறுகிருர்கள். கடும் முயற்சியும் கல்வி ஆர்வமும் உடைய மாணவர்கள் மட்டுமே தப்புகின்றனர். வேடிக்கையாக வரும் எவரும் அங்கு நீண்ட நாள் தங்குவதில்லை என்று அந்தக் கல்லூரித் தலைவர் ஒருமுறை தெரிவித்தார்!

அந்தக் கல்லூரி நிர்வாகத் தலைவர் தான் மற்றெல்லோரையும் விட வயது குறைந்தவர். வயதான பேராசிரியர்களையெல்லாம் ஒன்று சேர்த்து, இளைஞரான அவர் கல்லூரியை நடத்திச் செல்கிருர்! இளைஞர் என்ருல், மற்ற 80 வயதுக் கிழவர்களைப் பார்க்கும்பொழுது. இவருக்கு வயது 63! அந்தக் கல்லூரியில் இவர்தான் மிகக் குறைவான வயதுடையவர்!

— "மன்றம்"

---

## அறிவுக் கதிர்

பெரும்பாலும் அறிவாளிகள் மிகக் குறைந்த செல்வாக்குத் தான் உடையவர்களாக இருக்கிருர்கள். இதைவிட வருந்தத்தக்க செய்தி, வரலாற்றிலேயே வேறு கிடையாது.

— ஹெரடோடஸ்

# சுக்கிரன் கிரகத்தில் உயிர்வாழ் ஜீவன்கள் உண்டா ?

## தாவர வர்க்கங்கள் நிச்சயம் இருக்கலாமாம்!

பூமிக்கு சுமார் 41 கோடி கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சுக்கிரன் கிரகத்தில் உயிர் வாழ் ஜீவன்கள் இருக்கலாம் என்று பிரபல ஜெர்மன் வான சாஸ்திர நிபுணர் டாக்டர் ரூடால்ப் குஹ்ன் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். அங்குப் பிராண வாயுவும் ஜல வாயுவும் போதிய அளவுக்கு இருக்கிறதா என்பது பற்றி இன்னும்விஞ்ஞான உலகிற்கு எவ்விதத் தகவலும் இல்லை. கிடைக்கும் தகவல்களைப் பார்த்தால் பூமி 25 கோடி அல்லது 35 கோடி வருடங்களுக்கு முன் எப்படி இருந்ததோ அப்படி சுக்கிரன் இப்போது இருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகிறது. பறக்கும் தட்டுகளில் சுக்கிரவாசிகள் வருவதாக வெளியான செய்திகள் யாவும் வெறும் கட்டுக் கதையே!

மூனிச் (டாட்) - பூமியின் அடுத்த வீட்டுக் கிரகம் என்று சொல்லப்படும் சுக்கிரனில் உயிர் வாழ் ஜந்துக்கள் இருப்பது சாத்தியமே என்று மேற்கு ஜெர்மனிக்கு வெளியிலும் புகழ் பெற்ற வான சாஸ்திர நிபுணரான டாக்டர் ரூடால்ப் குஹ்ன் கூறுகிறார். பவேரியன் ஆல்ப்ஸ் மலையிலுள்ள வெண்டல்ஸ்டீன் சிகர வான ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் இவர்.

இப்போது கண்டுபிடிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டு வரும் வானஆராய்ச்சிக்கருவிகள் மூலம் பூமியில் மிக சௌகரியமான இடத்திலிருந்துகொண்டு கிரகங்களிலுள்ளவைகள் என்ன என்பதையெல்லாம் கண்டறியலாம். சுக்கிரன் பூமிக்கு சுமார் 4·1 கோடி கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து வருகிறது. இக்கிரகத்திலுள்ளவைகளைப்பற்றி இதுவரை விஞ்ஞானக்கருவிகள் எதன் மூலமும் அறிந்து கொள்ள முடியவில்லை. கவிஞர்கள் இதைக் காலை நட்சத்திரம் என்றும் மாலை நட்சத்திரம் என்றும் புகழ்ந்து இருக்கிறார்கள். இக்கிரகத்தைச் சுற்றி மேகம் படர்ந்தாற்போன்ற சூழ்நிலை எப்போதுமே இருந்து வருகிறது.

ஆனால் சில விசேஷ ஆராய்ச்சிகள் நடத்தியதன் மூலம் சுக்கிர கிரகத்தில் கார்பானிக் - காம்பௌண்ட் (கரியமில) வாயுக்கள் பிராண வாயுவுடன் கலந்து இருக்க வேண்டும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹைட்ரஜனும் (நீர் வாயு), கலப்பில்லாத பிராண வாயுவும் இருக்கிறதா

என்பது விஞ்ஞான உலகத்திற்கு இன்னும் தெரிய வரவில்லை.

சில அபூர்வ கருவிகள் மூலம் சுக்கிரனிலுள்ள சீதோஷ்ண நிலை மேல் பரப்பில் உறையும் அளவுக்கு ஒரு சிறிதளவு குறைவாக இருக்கும் என்றும் சுக்கிரன் தரை மட்ட சீதோஷ்ணம் 310 டிகிரி செண்டிகிரேட் (590 டிகிரி பாரன்ஹீட்)டுக்கு குறையாமல் இருக்கலாம் என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களை நீண்டகால ஆராய்ச்சிகளுக்குப் பிறகு கண்டு பிடித்தவர் 'நோபல் பரிசு' பெற்றவரான வான சாஸ்திர நிபுணர் ஸ்வான்டே அர்ரன்னேயஸ் என்பவர். இவரது கருத்துப்படி சுக்கிரனில் சராசரி சீதோஷ்ண நிலை சுமார் 30 டிகிரி செண்டிகிரேட் (86 டிகிரி பாரன்ஹீட்) என்பது. இருந்தாலும் இக்கிரகத்தில் உயிர்வாழ் ஜீவன்கள் இருப்பது சாத்தியமே என்று விஞ்ஞான உலகம் நம்புகிறது.

தாவர வர்க்கங்களும் ஏராளமாக சுக்கிரனில் இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. அவை இந்தியாவில் சரித்திர காலத்திற்கு முந்தியிருந்த தாவர வர்க்கங்களைப் போல இருக்கலாமாம். பூமியில் முன் காலத்தில் இருந்தது போலவே சில அபூர்வ பிராணிகளும் இருந்திருக்கலாம் என்று கூறப்பட்டாலும் இது இன்னும் விவாதத்திற்குரிய விஷயமாகவே இருந்து வருகிறது.

மீன் வகைகள், டினோஸார் போன்ற பிராணி ஆகியவை சுக்கிரனில் இல்லை என்றே கருதப்படுகிறது. சில ஆராய்ச்சியாளர்கள் அவை இருப்பதும் சாத்தியமே என்று கருதுகிறார்கள். பறக்கும் தட்டுகளில் சுக்கிரவாசிகள் என்று சொல்லப்படுவதெல்லாம் வெறும் கட்டுக் கதைகளே!

(யூ. பி. எஸ்.)

---

## அறிவுக் கதிர்

வெறும் கூர்த்த மதி மட்டும் ஒருவர் வாழ்க்கையைப் பண்படுத்துவதாகாது. அத்துடன் பிறர்க்குதவும் பேறும் அமைந்திருத்தல் வேண்டும். அப்போதே வாழ்க்கைப் பொன்மலர் நாற்றமுடைத்தாகும்.

—திரு. வி. க

---

(47-ம் பக்கத் தொடர்ச்சி)

சாம்பல் நிறப் பின்னணியில் வெள்ளை நிற வட்டங்களோ, சதுரங்களோ போட்டுக் காட்டினால், வாலில்லாக் குரங்குகள் அவற்றை அப்படியே காப்பியடித்து விடுகின்றன.

குரங்குகளும் கலைஞர்கள் தான்!

# சித்திரம் வரையும் குரங்குகள்!

மேற்கு ஜெர்மனியின் மன்ஸ்டர் பல்கலைக்கழக விலங்கியல் பேராசிரியர் ரென்ஷ் என்பவர். மூன்று வயது ஆண் குரங்கு (வாலில்லாதது) ஒன்றையும், ஏழு வயது நிரம்பிய சிம்பன்ஸீ ஜோடி ஒன்றையும் சித்திரம் வரையத் தூண்டி வெற்றியும் பெற்ருர்! அவற்றிடம் பென்சில், பிரஷ், கலர் மை ஆகியவற்றைக் கொடுத்து சித்திரம் வரையச் சொல்வது அவருக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. அவை இந்தப் புதிய கலையில் ஏகப்பட்ட உற்சாகத்துடன் ஈடுபட்டன. சில ஆண்டுகள் அவை தயாரித்த சித்திரங்களை அந்தப் பேராசிரியர் சேகரித்து அவற்றைக் கலைக் கூடங்களின் டைரக்டர்களிடமும், கலை வரலாற்ருசிரியர்களிடமும், கலைப்பொருள்களை வாங்கி விற்பவர்களிடமும் கொடுத்து அபிப்பிராயம் கேட்டார். அந்தச் சித்திரங்களைக் குரங்குகள் வரைந்தன என்ற உண்மையை அவர் அந்த நிபுணர்களிடம் சொல்லாமலே அபிப்பிராயம் கேட்டார். அந்தச் சித்திரங்களில் "சீரும், முறுக்கும்" இருப்பதாக அந்த நிபுணர்கள் கருத்து வெளியிட்டார்கள்.

பிராணிகளின் மிகச் சிறப்பான "கலைப் படைப்பு" கூட ஒன்று ஒன்றரை வயதுக் குழந்தையின் கிறுக்கலை விட மேலானதாயிருக்கமுடியாது என்று பேராசிரியர் ரென்ஷ் கூறுகிருர். குரங்குகள் கோணலும் மாணலுமாக, குறிப்பான அர்த்தம் எதுவுமில்லாமல், ஏகப்பட்ட நெளிவுகளுடன் வரைந்து தள்ளுகின்றன; சில சமயம் படத்தின் இடை வெளியிலெல்லாம் மையைக் கொண்டு நிரப்புகின்றன. ஆனால் கலை நிபுணர்கள் இந்தக் குரங்குகளின் படைப்புக்களை மிகவும் நவீன வகையைச் சேர்ந்த கலைப்படைப்புக்களாக மதிப்பிட்டார்கள். அந்தக் கருத்துப்படிப் பார்த்தால், இந்தப் படைப்புக்களுக்கும், நவீனக் கலையைப் போலவே கூடமான அர்த்தம் இருந்தாலும், சீரும், முறுக்கும் உண்டு என்பது தெளிவாகிறது. வாலில்லாக் குரங்குகளுக்கு ஓரளவுக்குகலையுணர்ச்சி உண்டு என்று பேராசிரியர் ரென்ஷ் கூறுகிருர். வாலில்லாக் குரங்கு ஒன்றின் கையில் ஒரு பிரஷையும், வர்ணங்களையும் கொடுத்துப்பாருங்கள்; நாம் வழிகாட்டி விட்டால் ஓவியம் வரைந்து வருவது அதன் பொழுது போக்காகிவிடும். நாம் கொடுக்கும் பொருளுக்கும், காகிதத்தின் அளவுக்கும் தக்கபடி அதன் படமும் அமையும்!

(46-ம் பக்கம் பார்க்க)

டெலிபோன் கண்டுபிடித்த

# அலெக்ஸான்டர் பெல்

(கிஷன் குஜ்ரால்)

மிகப் பெரிய விஞ்ஞானப் புதுமைகள் பல, எதிர்பாராதவையேயாகும். டெலிபோனும் அப்படித்தான்.

மின்விசை அலைகளைப் பயன்படுத்திக் கம்பி வழியாக மனிதன் குரலொலியை அனுப்பலாம் என்று, ஊர் பேர் தெரியாத இளைஞர் இருவர் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். ஆனால் எப்படி அதை நனவாக்குவது என்பதுதான் அவர்களுக்குத் தெரியவில்லை. பல நாள் முயன்றும் பலன் கிட்டவில்லை. எனினும் அவர்கள் ஊக்கம் தளராமல், உள்ளம் உடையாமல் மென்மேலும் முயன்றார்கள். 1875-ம் ஆண்டு ஒரு நாள், தந்தி அனுப்பும் கருவி பற்றி அவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். வெவ்வேறு அதிர்வுகளை உடைய ஒலி அலைகளை அனுப்புவதற்குப் பயன்பட்ட உலோகத் தகடுகள் மின்விசை ஓட்டத்தை நிறுத்தவும், செலுத்தவும் தக்கவாறு அதிர வேண்டும்; ஆனால் அவற்றில் ஒன்று அதிர முடியாதபடி இறுக்கி முடுக்கப்பட்டிருந்தது. அது அவர்களுக்கு ஒரு தொல்லையாகத்தான் தோன்றிற்று. ஆனால் அவர்கள் ஏமாற்றமெல்லாம் சிறிது நேரத்தில் பேரானந்தமாக மாறியது — அந்தத் தொல்லை பிடித்த உலோகத் தகட்டினால்!

தப்பிதமாக இறுக்கி முடுக்கப்பட்டிருந்த அத்தகடு ஒலி அலைகளுக்கேற்பத் தானே அதிரும் அதிர்வுத் தகடு போல் வேலை செய்து, தன் பின்னே இருந்த மின்காந்தக் கருவியில் தொடர்ச்சியான மின்னோட்டத்தை ஏற்படுத்தி, ஒலி அலைகளுக்குத் தக்கவாறு அந்த மின் ஓட்டத்தில் மாறுதல்களைச் செய்து வந்ததை அவர்கள் கண்டுதான் கழிபேருவகை கொண்டார்கள். தற்செயலாக நிகழ்ந்த தவறு தாங்கள் எண்ணியிருந்த கனவை நனவாக்கி விட்டதை அவர்கள் கண்டார்கள்.

## வெற்றி !

அடுத்து ஒன்பது மாதமாக அவர்கள் அந்த அதிர்வுத் தகட்டின் உருவத்தைத் திருத்தி அமைப்பதில் ஈடுபட்டார்கள். இறுதியாக 1876 மார்ச் 10-ம் தேதி அது நன்கு வேலை செய்தது; "மிஸ்டர் வாட்ஸன், இங்கு சற்று வந்து போங்கள்; உங்கள் உதவி தேவை" என்று முதன் முதல் டெலிபோனில் பேசினார் அவர்களில் ஒருவர்-

அவர்தாம் அலெக்ஸாண்டர் கிரகாம் பெல். அவருக்கு அப்போது வயது 29. ஸ்காட்லாந்தில் எடின்பரோ நகரில் பிறந்து வளர்ந்தவர். அன்று அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் செவிடர் பள்ளி ஒன்றில் ஆசிரியராக வேலை பார்த்து வந்தவர். அவருக்கு ஆராய்ச்சி உதவியாளராக இருந்தவர்தாம் தாமஸ் ஏ. வாட்ஸன் என்ற அமெரிக்கர்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, கிரகாம் பெல் பாஸ்டன் நகரில் கலை-விஞ்ஞான அமெரிக்கக் கழகத்தில் தமது டெலிபோனை இயக்கிக் காட்டினார். பின்னர் அதே ஆண்டு பிலடெல்பியா நூற்றாண்டுக் கண்காட்சியில் அவர் டெலிபோன் வைக்கப்பட்டது. பெல் டெலிபோன் வர்த்தக முறையில் பரவலாயிற்று.

## 7·4 கோடி டெலிபோன்

சில ஆண்டுகளுக்குள் டெலிபோன் சர்வ சாதாரணமாயிற்று—அமெரிக்காவிலும், பிற நாடுகளிலும். 1880இல் அமெரிக்காவில் 50,000 டெலிபோன்கள் இருந்தன ; இன்று 7 கோடியே 40 லட்சத்துக்கு மேல் இருக்கின்றன. சராசரியாக 24 மணி நேரத்தில் அமெரிக்கர்கள் உள்ளூரில் உள்ளவர்களை 25 கோடித் தடவைகளும் வெளியூரில் உள்ளவர்களை 90 லட்சம் தடவைகளும் டெலிபோனில் கூப்பிடுகிறார்கள்.

டெலிபோன் அன்றாட வாழ்க்கைப் பொருளாக நிலைபெறத் தொடங்கியதும், கிரகாம் பெல் செவிடர்களின் நலனை மேம்படுத்தும் வேலையைக் கவனிக்கலானார். அதுதான் அவருக்கு முதன் முதல் ஏற்பட்ட ஆர்வம். அவரது தந்தை லண்டனில் பேச்சு வாத்தியாராக இருந்தவர். அப்போது அவருக்கு உதவி செய்து, செவிட்டு ஊமையர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்குக் கிரகாம் பெல் ஒலிக் குறிகள் சிலவற்றைக் கண்டுபிடித்துக் கொடுத்தார்.

கிரகாம் பெல்லின் மனைவியார் ஒரு நச்சுக் காய்ச்சல் கண்டு செவிடானதும், செவிடர் நலனின் அவருக்கு ஆர்வம் வளர்ந்தது. செவிட்டின் தன்மை, அதன் காரணங்கள் ஆகியவற்றை அவர் நுணுகி ஆராய்ந்தார் ; அது பரம்பரையாக வருவது பற்றியும் விரிவாக ஆராய்ந்தார். தளராத முயற்சியின் பயனாக, அவர் கண்டு பிடித்த கருவிகள் பல. அவற்றுள், போட்டோபோன் என்பது ஒலி அலைகளை ஒளி அலைகளாக மாற்றிப் பேச்சுக் குரலைத் தெரிவிப்பது ; ஆடியோ மீட்டர் என்பது செவிடர்க்கு உதவும் இன்னொரு கருவி; இண்டக்ஷன் தராசு என்பது உடம்பினுள் உலோகப் பொருள்கள் இருந்தால் கண்டுபிடிப்பது. கிராமபோன் பெட்டிகளுக்கு வேண்டிய உருளையானதும் தட்டையானதுமான மெழுகு ஒலிப் பதிவுத் தட்டுகளையும் அவர் கண்டுபிடித்தார்.

1883இல் பெல், "சயன்ஸ்" என்னும் சஞ்சிகையை ஏற்படுத்தினர்; அதுவே பின்னர், விஞ்ஞான வளர்ச்சி அமெரிக்கச் சங்கத்தின் சஞ்சிகையாயிற்று. பிறகு ஸ்மித்ஸோனியன் நிலையத்தில் நட்சத்திர ஆராய்ச்சிக்கான வானுய்வுக்கூடம் ஒன்றை அமைக்க அவர் பெரும் பொருள் கொடுத்தார்.

## பல கருவிகள்

கிரகாம் பெல் இறுதி 25 ஆண்டுகளில் விமான இயலில் ஆர்வம் கொண்டார். அதன் பயனுக அவர் கண்டுபிடித்த ஒருவகைப் பட்டம் (காற்றூடி) பல வகைக் கருவிகள் செய்யும் வழியைக் காட்டியது.

1907இல் அவர் விமானப் பரிசோதனைச் சங்கத்தை உருவாக்க உதவினர்; அதனல் பல விஞ்ஞானிகள் ஒன்று சேரவும் கடல் விமானம் உருவாகவும் வழியாயிற்று.

அமெரிக்கப் பிரஜையாக ஆன கிரகாம் பெல் விஞ்ஞான உலகில் பெரும் பேருடன் விளங்கினர். 1922 ஆகஸ்ட் 2-ம் தேதி அவர் காலமானபோது, அமெரிக்காவிலுள்ள டெலிபோன்கள் எல்லாம் சிறிது நேரம் மௌனம் காத்து அவருக்கு மரியாதை செலுத்தின.

[குறிப்பு :—அலெக்ஸான்டர் கிரகாம் பெல் பிறந்த நாள் மார்ச் 3. அதையொட்டி இக்கட்டுரை.]

---

(57-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கிறது; ஆனல் நிர்வாகச் செலவாக ரூ. 175-க்கு மேல் செலவாகிறது. ஆகவே, 10 சதவிகிதம் என்பதை 20 சதவிகிதமாக உயர்த்தவேண்டும்.

ஆரம்பப் பள்ளிகளில், 6, 7, 8—வது வகுப்புக்களில் மாணவர்களிடம் சம்பளம் வசூலிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் - காவலர்கள், என். ஜி. ஓ.-க்கள், மற்றும் சிலருடைய பிள்ளைகளுக்குச் சம்பளம் பெறக்கூடாது எனக் குறிப்பிட்டிருக்கிறது. இதற்காக அரசாங்கம் அப்பள்ளிகளுக்கு இழப்புத் தொகையாக—6—ஆம் வகுப்புக்கு ரூ. 1—2—0; 7—ஆம் வகுப்புக்கு ரூ. 1—6-0, 8—ஆம் வகுப்புக்கு ரூ. 1-8—0 ஆக வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது, அத்தொகையை முறையே 6 அணு, 7 அணு, 8 அணுவாகக் குறைக்கப்படப்போவதாகக் கூறப்படுகிறது. இதனைக் குறைக்கக்கூடாது. பழைய அளவிலேயே இழப்புத் தொகையை அரசாங்கம் வழங்கவேண்டும்."

— நம் நாடு

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!

# அன்பு நிறைந்த வேண்டுகோள்...!

அன்புடையீர்!

துவக்கப் பள்ளிகளிலும், உயர் துவக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், பெண்கள் பள்ளிகளிலும், மாதர் நல சங்கங்களிலும் ஏனைய கல்வி நிலையங்களிலும்...சுதந்திரவிழா, குடியரசு விழா, குழந்தைகள் தினவிழா, பொங்கல் விழா, ஆண்டு விழா போன்ற விழாக்கள் நடத்தும்போது மாணக்கர் நடிப்பதற்கு ஏற்றவண்ணம் அழகிய நாடக நூல்களை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். நாட்டுப்பற்றும் தேசிய உணர்ச்சியும் ஊட்டும் வகையில் தீட்டப்பட்டுள்ள இந்த நாடகங்களைத் தாங்கள் தங்கள் நூல் நிலையங்களில் வைத்து எங்களை மேலும் ஊக்குவிக்கும்படி மிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

சென்னை–1, 20–3–'63.

தங்கள் அன்புள்ள,
*உரிமையாளர்,*
**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்.**

★ *படிப்பதற்கேற்ற எழில்மிகு ஏடுகள்!*
★ *நடிப்பதற்கேற்ற நற்றமிழ் நாடகங்கள்!!*

இதோ

பைந்தமிழ் எழுத்தாளர்

திருவாளர் **தாமரைக் கண்ணன்** அவர்கள்

தீட்டிய

அழகிய நாடக நூல்கள்! பள்ளி நூல்நிலையங்களில் வைப்பதற்கேற்ற அருந்தமிழ்க் கருவூலங்கள்!

| | ரூ. | காசு |
|---|---|---|
| 1. வெண்ணிலா | 1 | 50 |

*தன் அண்ணனைத் திருத்தியதுடன் நன்கொடை யென்றால் நானூறுமைல் தூரம் ஓடும் தந்தைக்கும்*

நல்வழிகாட்டியாக இருந்து கல்விக்கூடங்கள் கலைக்கூடங்களாக விளங்கப்பாடுபடும் ஓர் மாணுக்கியைப் பற்றிய நாடகம். கருத்தாழமும் நகைச்சுவையும் நிறைந்த சமுதாயப் படைப்பு!

## 2. மருது பாண்டியர் 2 00

வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழிக்க அரும்பாடு பட்டுத் தம் நல்லுயிர் ஈந்து நற்புகழ் எய்திய தமிழ் மறவர் இருவரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகம். துள்ளும் நடையும் துடிப்புள்ள வசனங்களும் நெஞ்சத்தை உருக்கும் காட்சிகளும் நிறைந்த உணர்ச்சிமிக்க சித்திரம்!

## 3. அலெக்ஸாண்டர் 1 50

'உலகிலுள்ள காடெல்லாம் நாடாக வேண்டும்; அந்த நாடெல்லாம் நானாள வேண்டும்' என்று மண்ணகமெங்கணும் வெற்றி முரசு கொட்டிய கிரேக்கப் பெருவேந்தனின் வரலாற்றை முழுமையாக விளக்கும் அரிய நாடகம்! உள்ளத்தைக் கலங்க வைக்கும் காட்சிகளும் உணர்ச்சியுடன் வீறு கொண்டு எழச்செய்யும் பகுதிகளும் சிந்தனைக்கு அரிய விருந்தளிக்கும் நிகழ்ச்சிகளும் நிறைந்த ஈடு இணையற்ற ஏடு! தமிழில் இதுபோல் இதுவரை வெளிவந்ததில்லை!!

## 4. கிள்ளிவளவன் 1 50

கிள்ளிவளவன், நிலாச்சோறு, குமணன், இரத்த பாசம், புத்தர் ஆகிய ஐந்து அழகிய ஓரங்க நாடகங்களின் தொகுப்பு. ஏற்றமிகு கருத்துக்களைக்கொண்ட எழிலார் ஏடு!

**கழிவு உண்டு. அருள் கூர்ந்து அணுகுங்கள்.**

★

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

# சட்டமன்றத்தில் ஆரம்பக்கல்வி

*தமிழகச் சட்டமன்றத்தில், கல்வித்துறை மானியக் கோரிக்கைக்குக் கொண்டுவரப்பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :—*

## இரா. நெடுஞ்செழியன்

1963—64-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் கல்வித் துறைக்கு ரூ. 29 கோடிக்கு மேல் ஒதுக்கியமைக்காக நிதியமைச்சரைப் பாராட்டுகிறேன்.

நாட்டிலுள்ள நெருக்கடி நிலைமையின் காரணமாகச் செலவைக் குறைத்துவரும் இத்தருணத்தில், கல்வித்துறைக்குரிய செலவுகளைக் குறைக்காமல், கூட்டியிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

சின்னஞ் சிறுவர்களுக்காக 'பிரி பிரைமரி' பள்ளிகளை அரசு அமைக்க வேண்டும். இப்பள்ளிகளை அமைப்பதில் செலவு அதிகமாகிறது என்று அரசாங்கம் கருதுமானால், இப்படிப்பட்ட பள்ளிகளைத் தனியார்கள் அமைத்து நடத்த அரசினர் ஊக்கம் தரவேண்டும்.

பள்ளிகளில், 1958-ஆம் ஆண்டில், 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் இருக்கவேண்டும் என்றும், அதற்கு மேற்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை இருந்தால் மற்றொரு ஆசிரியரை நியமித்துக் கொள்ளலாம் என்றும் உத்தரவு இருந்தது ; ஆனால் இப்பொழுது 70 மாணவர்கள் வந்தால்தான் மற்றொரு ஆசிரியரை ஏற்படுத்தலாம் என்று இருப்பதாகக் கூறப்படுகிறது.

69 மாணவர்கள் இருந்தால் கூட ஒரே ஆசிரியர்தான் இருக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. இதன் பயனாக, அம் மாணவர்களுக்குப் போதிக்க வேண்டிய விஷயங்களை முறையாகப் போதிக்க முடியாது. மாணவர்களை மனதில்வைத்து, அவர்களின் குறைபாடுகளை அறிந்து அவற்றைப் போக்க எவ்வித முயற்சியும் ஆசிரியரால்

---

## அறிவுக் கதிர்

நேரம் இல்லாததால் மற்றவர்களிடம் அன்பாகப் பழக முடியவில்லை என்கிறீர்களா? இதை நான் ஏற்கமுடியாது. வாழ்க்கை சிறியதுதான். ஆனால் மற்றவர்களோடு அன்பாகப் பழக முடியாத அளவுக்கு அது சிறியது அல்ல.

— எமர்சன்

மேற்கொள்ளமுடியாது. அவர்களுக்கு இருக்கின்ற பலவீனத்தை—குறையைப் போக்கி, பாடத்தில் முறையான பயிற்சி தர இயலாது என்பதை உணரவேண்டும்.

கூடுமான வரையில், ஓராசிரியர் பள்ளிகளை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். பள்ளிகள் ஏற்படுத்துவதில், 15-20 மைல் என்று வெகுதூரம் இருந்து, அதன் காரணமாகப் போதிய மாணவர்கள் கல்வி கற்க வரமாட்டார்கள் என்ற நிலை இருந்தாலன்றி ஓராசிரியப் பள்ளிகளை அமைக்கக்கூடாது.

தமிழை மட்டுமே வைத்துக்கொண்டு, அனைத்து உலகத் தொடர்பு — வாணிபம் — விஞ்ஞான ஆராய்ச்சிகள் ஆகியவற்றை ஏற்படுத்திக்கொள்ள முடியாது. ஆகவே, அதற்கென ஒரு மொழி தேவைப்படுகிறது. அந்த அளவில் எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், ஆங்கில மொழி கடந்த இருநூறு ஆண்டுக்காலமாக இந்த நாட்டிலே பயிலப்பட்டு, வழக்கில் இருந்து வருகிறது.

ஆகவே, ஆங்கிலமொழியை உலகத் தொடர்புக்கு – அனைத்துலக வாணிபத்திற்கு-விஞ்ஞான நுட்பங்களை அறிவதற்கு – உலக அறிவைப் பெறுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழ்மொழியால் இயலாத இந்தி இதில் – வேறு மொழி வைக்கப்படும் என்ற நிலையில் - ஆங்கில மொழி அறிவுபெற வேண்டும்.

பாடமொழியாகத் தமிழே இருக்க வேண்டும். 'மொழி' என்ற வகையில் ஆங்கிலம் கற்பிக்கப்படவேண்டும். இதற்காக மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் மாணவர்களுக்குப் போதிக்கப்படவேண்டும்.

மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் போதிக்க அமைச்சர் மேற்கொண்டுள்ள முயற்சியை நான் ஆதரிக்கிறேன்.

ஆங்கிலம், உலகத் தொடர்புக்கு - விஞ்ஞான வளர்ச்சிக்கு- அறிவுத் தொடர்புக்கு அவசியம் தேவையாகும்.

ரஷ்யா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் தாய்மொழியின் மூலமாகக் கற்பிக்கப்படுகிறது என்றாலும், ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்ந்து அங்கெல்லாம் ஆங்கில மொழியும் கற்பிக்கப்படுகிறது.

மாணவர்களிடையே கையெழுத்து ஒழுங்காக இல்லை. அவர்களுக்குக் கையெழுத்துப் பயிற்சி இல்லாமையே இவ்விதக் குறைபாட்டுக்குக் காரணமாகும். பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகிய பிரெஞ்சுப் பகுதிகளில், துவக்கக் கல்வியிலிருந்து கல்லூரிப் படிப்புவரை கையெழுத்துப் பயிற்சி இருந்துவருகிறது; அதன் காரணமாக, அப்பகுதிகளில் பிரெஞ்சு மொழியில் எழுதப்படுவது அழகாக இருக்கிறது.

ஆகவே, இங்கும் கையெழுத்துப் பயிற்சி — உயர்நிலைப்பள்ளி வரையில் — கண்டிப்பாக இருக்க வேண்டும்.

மாணவர்களிடையே கட்டுப்பாடு இல்லையெனக் கூறப்படுகிறது. இதற்குக் காரணம், அப்பள்ளியின் தலைமை ஆசிரியரே ஆவார். அவரின் சிறப்பான தகுதி-திறமையைப் பொறுத்தே கட்டுப்பாடு வளரும். தலைமை ஆசிரியராக விளங்குபவருக்கு முதலில் தேவைப்படுவது தோற்றப் பொலிவாகும். தோற்றப் பொலிவின் மூலம், பிற ஆசிரியர்களும், மாணவர்களும் அவரை மதிக்கும் நிலை ஏற்படும்.

இரண்டாவதாகத் தேவைப்படுவது கட்டுப்பாடாகும். தலைமை ஆசிரியர்களை நியமிப்பதில் 'சீனியாரிட்டி' முறையைக் கையாளுவதைவிட, தோற்றப் பொலிவு திறமை ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும்.

நான் ஏற்கனவே இம்மன்றத்தில் எடுத்துக் கூறியபடி, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சீருடை வழங்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சேவகர்கள் ஆகியோருக்குச் சீருடை இருப்பதைப்போல், மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சீருடை இருந்து தீர வேண்டும்.

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே வித்தியாசம் காணமுடியவில்லை. மாணவர்கள் அவ்வளவு மிடுக்காக இருக்கின்றனர்.

ஆகவே, வேறுபாட்டைப் புரிந்து கொள்ளவும், மாணவர்களுக்கிடையே உயர்வு—தாழ்வு மனோநிலை ஒழிக்கப்படவும் சீருடை மிகவும் அவசியமானதாகும்.

இதனை அரசாங்கம் வரையறுத்து, முதலில் அரசாங்கமே அவ்வித உடைகளை ஆசிரியர்களுக்கு வழங்கலாம்; பின்னர், அவர்களே கூட அதனைத் தைத்துக்கொள்வர். இதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்."

## புலவர் கோவிந்தன்

மாணவர்களின் கல்வித்தரம் குறைந்துவருகிறது எஸ். எஸ். எல். சி. வகுப்பில் தேர்வு பெற்றவர்கள் 55 சதவிகிதம் தனியார் பள்ளியிலும், 37 சதவிகிதம் அரசாங்கப் பள்ளியிலும், தேர்வு பெற்றதாகக்கேள்வியொன்றுக்கு அமைச்சர் பதில் அளிக்கையில் கூறினார். ஏன் இந்த நிலை?

சீருடை, பகல் உணவு என்பதில் கல்வி இயக்குநர் அதிக அக்கறை கொண்ட காரணத்தாலோ என்னவோ, தரம் குறைகிறது.

நாட்டின் பாதுகாப்பு நிதிக்காக மாணவர்களை மேலும் மேலும் வற்புறுத்திப் பணம்

வசூலிக்கப்படுகிறது. இதில் ஆசிரியர்கள், டி. இ. ஓ ஆகியோர், கல்வி இயக்குநரிடம் நல்ல பெயரெடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கையின் பயனைப் பாரபட்சம் தலையெடுக்கவும், தவறுகள் மறைக்கப்படவும் காரணமாகிறது.

கள்ளநோட்டு அடிப்பதைப் போல், 'கள்ள சர்டிபிகேட்' வழங்கப்படுகிறது. இதற்கு இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும்.

கல்வித்துறையில், பொறுப்பைப்பற்றிய பிரிவில் இன்னும் குழப்பம் காணப்படுகிறது; பாடத் திட்டத்திலும் குழப்பம் நிலவுகிறது; இவை யனைத்தும் முறைப்படுத்தப்பட வேண்டும்.

ஆசிரியப் பயிற்சிக்குரிய மாணவர் தேர்வில், ரூ. 100, 200 என்று பேசப்படுகிறது. 'இதனைக் குறிப்பிட்டுக் கூறினால் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அமைச்சர் பதிலளிப்பார். இவற்றைக் கண்டு பிடிப்பதில், எங்களை விட அமைச்சருக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. அமைச்சர் அவர்கள், பயிற்சிப் பள்ளியில் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு வந்துள்ள பெற்றோர்களைக் கலந்துபேசிப் பார்த்தால், உண்மைத் தகவல் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வெ. கிருஷ்ணமூர்த்தி

"நம்முடைய மாணவர்களின் கல்வித்தரம் குறைந்து வருவதாகப் பொதுவாகப் பேசப்பட்டு வருகிறது. பெரிய நிபுணர்களும், இதனை எடுத்துக் கூறியுள்ளனர்.

மாணவர்களை வைத்துப் பரீட்சை செய்வதிலேயே நமது பாடத் திட்டத்தை வகுத்து வருகிறோம்.

கல்வித் துறையில் நிரந்தரமான கொள்கையைக் கடந்த பத்து ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கவில்லை. அடிக்கடி ஏற்பட்டு வரும் கல்வித் திட்ட மாற்றமே, தரக்குறைவுக்குக் காரணமெனக் கருதுகிறேன்.

கடலூரில், அமைச்சர்களை வரவேற்பதற்காகப் பள்ளி மாணவர்களுக்கு ஒருவார காலமாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஏன் இந்த வரவேற்புக்குப் பயிற்சி? வேறு சில நாடுகளில்தான் இப்படிப்பட்ட பயிற்சியும், பிஞ்சு உள்ளங்களில் அரசியலைக் கலத்தலும் இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்; ஆனால், ஜனநாயக நாட்டில் இத்தகைய பயிற்சிகள் ஏன்? சின்னஞ்சிறுவர்களின் உள்ளத்திலே அரசியலைப் புகுத்துவதும், அமைச்சர்களை வரவேற்பதற்கு அவர்களுக்குப் பயிற்சி தருதலும் அவசியமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சீருடை வழங்குவது என்பது பிள்ளைகளின் பெற்றோர்கள்

தைத்துத் தந்த உடையைப் பெற்று வழங்கப்படுகிறது.

பகல் உணவுத் திட்டம், துவக்கத்தில் பயனுள்ளதாக இருந்தது; இப்போது, தீய பலனையே தருகிறது.

பகல் உணவுக்காக என்று மாணவர்களும், ஆசிரியர்களும் மேற்கொள்ளும் முயற்சிகள் கல்வியின் தரத்தையே குறைத்து விடுகின்றன.

மாணவர்களுக்கு ஒரே சீரான உடை வழங்கப்பட வேண்டும். இதன் பயனாக மாணவர்களிடையே வகுப்பு வேற்றுமைகளையப்பட ஏதுவாகும். இதனை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்.

## கே. ஏ. மதியழகன்

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வடிகட்டும் முறையை ரத்து செய்ததை நான் வரவேற்கிறேன்.

வடிகட்டும் முறையை எதிர்த்துப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் போராடியிருக்கிறேன். காலங்கடந்தாவது இந்த அரசுக்கு 'ஞானம்' பிறந்ததை வரவேற்கிறேன். அதே போல, இந்தித் தேர்வை ரத்து செய்ததையும் வரவேற்கிறேன்.

## காஞ்சி. மணிமொழியார்

"நாட்டின் முன்னேற்றம் தரமான கல்வி அளிப்பதில்தான் இருக்கிறது. ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் உள்ளத்தில் துன்பக்கோடு துயரக்கோடு படியாமல் இருக்கவேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளுவர். ஆரம்பக் கல்வியின் தரம் குறைந்து வருகிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆரம்ப ஆசிரியர்களின் வருவாய் குறைந்ததாகும். இதைக் கொண்டு வாழ்வை நடத்த முடியவில்லை. விலைவாசி உயர்வு அவர்களைப் பாதிக்கிறது என்பது மட்டுமல்ல; நாள்தோறும் இடப்படும் ஆணைகளும் பாதிப்பதாக இருக்கிறது.

தொழில்துறை ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புத் தர வேண்டும்.

35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று 1958-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்கு முன்னர் இருபது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருந்தது; ஆனால், இப்பொழுதோ 35–க்கு மேற்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படுவதைத் தவிர்க்கவேண்டும்; இதனால் கல்வித்தரம் கூடும்.

தனியார் துறையில் நடைபெறும் ஆரம்பப் பள்ளிகளில், ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவிகித அளவே நிர்வாகச் செலவிற்காக வழங்கப்படுகிறது; 5 ஆசிரியர்களைக் கொண்ட பள்ளிக்கு ரூ. 35 நிர்வாகச் செலவாக அரசாங்கம்

(50-ம் பக்கம் பார்க்க)

# திருநெல்வேலி ஜில்லா உதவிபெறும்
# ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்
## அரசினருக்கு சமர்ப்பித்த விண்ணப்பம்.

---

I. **ஆசிரியர் மாணவர் விகிதம் :** *கல்வி சுகாதார இலாகா அரசினர் உத்தரவு* S. M. S. 744, dated 31-3-62.

*இவ்வுத்தரவின்படி ஒரு ஆசிரியருக்கு மாணவர் பதிவு 40. ஆஜர் 35 வீதம் மொத்தத்தில்* over all roll and attendance *இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பள்ளிகளில், ௸ விகிதம் திருப்தி ஆகும் வரை, ஏற்படும் எவ்வித காலி ஸ்தானங்களுக்கும் புது ஆசிரியர் நியமனம் கூடாது.*

*இவ்வுத்தரவு ஆரம்பக் கல்வி முன்னேற்றத்தையும் ஆரம்பப் பள்ளி நிர்வாகத்தையும் வெகுவாய்ப்பாதிக்கிறது. ஆசிரியர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் மிகுந்த தொல்லைகளையும் உற்சாகக் குறைவையும் உண்டுபண்ணுகிறது. வகுப்புகளில் பாடத் திட்டங்களை சரிவர பூர்த்தி செய்யக் கூடாத நிலையை உண்டாக்குகிறது. பள்ளி வயதுள்ள படியாத குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டிய பணியை ஸ்தம்பிக்கச் செய்கிறது.*

*ஏனெனில், உதாரணமாக ஒரு பள்ளியில்,*

| | | | | |
|---|---|---|---|---|
| 1-வது | வகுப்பில் ரோல் 75, | ஆஜர் 65, | ஆசிரியர் | 2 |
| 2 ,, | ,, ,, 40, | ,, 32, | ,, | 1 |
| 3 ,, | ,, ,, 30, | ,, 25, | ,, | 1 |
| 4 ,, | ,, ,, 25, | ,, 20, | ,, | 1 |
| 5 ,, | ,, ,, 20, | ,, 18, | ,, | 1 |
| | மொத்தம் ,, 190, | ,, 160, | ,, | 6 |

*இருந்து வந்தால், இப் புது உத்தரவுப்படி அப்பள்ளியில் 5 ஆசிரியர்கள் தான் இருக்க முடியும். (160÷35=4—20=5). ஆதலால் அப்பள்ளியில் ஒரு ஆசிரியர் விலகினாலும், ரிட்டயர் ஆனாலும் அந்த இடத்தில் வேறு ஆசிரியர் நியமனம் கூடாது. அப்படி ஒரு ஆசிரியர் விலகின பிறகும் கூட, வேறு ஒரு ஆசிரியர் பேறுகால அல்லது உரிமை லீவில் இருந்தால் அந்த இடத்திலும் பதில் ஆசிரியர் நியமனம் கூடாது. இந்நிலையில் அப்பள்ளியின் பாட போதனை நிலை என்ன !*

வேறு ஒரு பள்ளியில்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1–வது | வகுப்பில் | ரோல் | 45, | ஆஜர் | 35, | ஆசிரியர் | 1 |
| 2 ,, | ,, | ,, | 30, | ,, | 25, | ,, | 1 |
| 3 ,, | ,, | ,, | 20, | ,, | 15, | ,, | 1 |
| 4 ,, | ,, | ,, | 12, | ,, | 8, | | |
| 5 ,, | ,, | ,, | 5, | ,, | 3, | | |
| | மொத்தம் | ,, | 112, | ,, | 86, | ,, | 3 |

இருந்து வந்தால், இப் புது உத்தரவுப்படியும் இப்பள்ளியில் 3 ஆசிரியர் இருக்கலாம். ஆனால் இம் மூவரில் ஒருவர் பேறுகால அல்லது உரிமை லீவில் இருந்தால் மீதி இருவரே அப்பள்ளியை நடத்தி வர வேண்டும். அப்பொழுது அவர்களில் ஒருவருக்கு லீவு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் மீதி இருக்கும் ஒரு ஆசிரியரே எல்லா வகுப்புக்களையும் கவனிக்க வேண்டும். இந்நிலையில் அப்பள்ளியின் பாட போதனைகள் எப்படி இருக்கும்!

இது போன்ற பல சிக்கல்களையும் சங்கடங்களையும் இப் புதுச் சட்டம் விளைவிப்பதால், சர்க்கார் இச் சட்டத்தைப் புனராலோசனை செய்து ஒரு ஆசிரியருக்கு மாணவர் பதிவு 25, ஆஜர் 20 என்று முன்போல் மாற்றவும்.

அல்லது, இப் புதுச் சட்டத்தால் இருந்துவரும் குறைபாடுகளை உடனடியாக நீக்க, ஒரு பள்ளி நிர்வாகி, கல்வி அதிகாரிகளின் உத்தரவு பெற்று, கூடுதல் அல்லது புது ஆசிரியர் நியமனம் செய்து கொள்ள உடனே உத்தரவு பிறப்பிக்கவும், இச்சங்கம் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

## II. ஆங்கில பாடமும் செக்கண்டரி கிரேடு ஆசிரியரும் :

செக்கண்டரி கிரேடு ஆசிரியரே 4-வது வகுப்பிலிருந்து ஆங்கில பாடம் போதிக்க வேண்டுமென்றும், ஒரு ஆரம்பப் பள்ளிக்குப் பொதுவாக ஒரு செக்கண்டரி கிரேடு ஆசிரியரே அனுமதிக்கப் படுவர் என்றும் சர்க்கார் உத்தரவு அமுலில் இருந்து வருகிறது.

புது ஆசிரியர் மாணவர் விகிதப்படி, புது அல்லது பதில் ஆசிரியர் நியமனம் செய்யக்கூடாத, ஓர் ஆரம்பப் பள்ளியில் உள்ள, அந்த ஒரே செக்கண்டரி கிரேடு ஆசிரியர் பேறுகால அல்லது உரிமை லீவில் இருந்தால், அக்காலத்தில் அப்பள்ளியின் ஆங்கில பாடப் போதனையின் நிலை என்ன !

ஒன்று அல்லது இரண்டு செக்கண்டரி கிரேடு ஆசிரியர்கள் மட்டும் உள்ள பல உயர்தர ஆரம்பப் பள்ளிகளும் உண்டு. இவர்களே 6-வது 7-வது வகுப்புகளுக்கு P. V. I. (கைவேலை) பாடம் 8 பீரியட் தவிர மற்ற எல்லாப் பாடங்களும், 4-வது 5-வதுவகுப்புகளுக்கு 11 பீரியட் (5+6) ஆங்கிலப் பாடமும் எடுத்து வரவேண்டும். *P. V. I. பாட நேரம் தவிர, மற்ற 3 பீரியட் ஆங்கில பாட நேரங்களில் 6-வது 7-வது வகுப்புகளுக்கு, கீழ் வகுப்பிலுள்ள ஹையர் கிரேடு ஆசிரியர் பாடம் எடுக்க சர்க்கார் அனுமதியும் கிடையாது.

மேலும் அந்த ஒன்று, இரண்டு செக்கண்டரி கிரேடு ஆசிரியர் பேறுகால அல்லது உரிமை லீவில் இருந்து, அப்பள்ளியில் பதில் ஆசிரியர் நியமனம் ஆகாத நிலையில் இருந்தால், அப்பள்ளியின் பாடபோதனை, ஆங்கிலம் உள்பட நிலை என்ன !

மேலும் 4-வது 5-வது வகுப்புகளுக்குத் தற்சமயம் அமுலில் இருக்கும் எல்லாப் பாட திட்டங்களையும் கவனித்தால், அவற்றை செக்கண்டரி கிரேடு ஆசிரியரே திறம்பட போதிக்க முடியும் என்பது உறுதி.

மேலும் 3-வது வகுப்பிலிருந்தே, ஆங்கில பாடம் போதிக்கப்பட வேண்டும் என்று சர்க்கார் ஆலோசனையும் இருந்து வருகிறது.

ஆதலால், 4-வது, 5-வது வகுப்புகளில் ஏற்கனவே செக்கண்டரி கிரேடு ஆசிரியர்கள், ஹையர்கிரேடு சம்பளத்தில் நியமனம் பெற்று வேலை செய்து வந்தால், அவர்களுக்கு செக்கண்டரி கிரேடு சம்பளம் கொடுக்க உத்தரவு பிறப்பிக்கவும்.

தற்சமயம் 4-வது, 5-வது வகுப்புகளில் வேலை பார்த்து வரும், ஹையர்கிரேடு ஆசிரியர்களைப் பாதிக்காமல், இனி அவ்வகுப்புகளில் ஏற்படும் காலி ஸ்தானங்களுக்கு செக்கண்டரிகிரேடு ஆசிரியரே நியமனம் செய்ய உத்தரவு பிறப்பிக்கவும், இச்சங்கம் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

III. **ஆரம்பப் பள்ளி நிர்வாக மானியம் :** சர்க்காராலும், ஸ்தல ஸ்தாபனங்களாலும், தனிநிர்வாகிகளாலும் நடத்தப்படும் பாடசாலைகளின் கல்வித் தரத்தை ஒப்பிட்டுப் பார்த்து, அரசினர், தனியார் பள்ளிகளின் சிறப்பையும் அவசியத்தையும் கண்டு, மேலும் மேலும் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரமும் ஊக்கமும் காட்டி வருவது உண்மையே. ஆனால், அதே சமயத்தில் தனியார் பள்ளிகளுக்கு அரசினர் அளிக்கும் மானியத்தையும், சர்க்கார், ஸ்தல

ஸ்தாபன பள்ளிகளுக்குச் செலவாகும் புள்ளி விபரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், தனியார் பள்ளிகளுக்கு அரசினர் வழங்கிவரும் நிர்வாக மானியம் மிகமிகச் சொற்பம் என்பது தெளிவாகும்.

முன்னர் 50%வரை அரசினர் கொடுத்து நிர்வாகிகளை ஊக்குவித்து வந்த நிர்வாக மானியம் (Efficiency Grant) படிப்படியாக 25, 15, 10% (Maintenance Grant) ஆகக் குறைக்கப்பட்டது. இந்தச் சிறிய அளவு 10% நிர்வாகக் கிராண்டுகூட பள்ளி வரவு செலவுக் கணக்குத் தணிக்கையில், பல செலவு அயிட்டங்களைத் தள்ளுபடி செய்தும், பல அயிட்டங்களை ரூ. 25, 50-க்குள் வரையறுத்தும், வெகுவாகக் குறைக்கப்படுகிறது.

3 ஆசிரியர் உள்ள ஒரு சிறு ஆரம்பப் பாடசாலைக்கும் 15, 20 ஆசிரியர்கள் உள்ள ஒரு பெரிய ஆரம்பப் பாடசாலைக்கும் ரிப்பேர், வெள்ளையடிப்பு செலவுக்கு ஒன்றுபோல் ரூ. 20 தான் ஒப்புக்கொள்ளப்படுமென்று வரையறுப்பதும், ரிஜிஸ்டர், பேப்பர் முதலிய ஸ்டேஷனரி சாமான்களுக்கு ஒரு ஆசிரியருக்கு ரூ. 1 வீதம் கணக்கிட்டு வரையறுப்பதும், பள்ளி வாடகைக் கட்டிடங்களுக்கு வருஷாந்திர இன்ஸ்பெக்ஷன் பள்ளிவிழா சமயங்களில் பள்ளி நிர்வாகி தன் கையிலிருந்து ரூபாய் ஐந்தோ ஆறோ செலவு செய்த அச்செலவு, ஒப்புக்கொள்ளக்கூடிய அயிட்டம் இல்லை என்று தள்ளி விடுவதும், ரூ. 400 செலவு செய்து, பள்ளிக்கு பெஞ்சு, நாற்காலிகள் வாங்கி, ரூ 200 சர்க்காரிலிருந்து பெஞ்சு நாற்காலி மானியம் (Furniture grant) வாங்கியிருந்தாலும், வாங்காவிட்டாலும், அந்த ரூ. 400 செலவு ஒப்புக்கொள்ளக்கூடிய அயிட்டம் இல்லை என்று தள்ளி விடுவதும், இது போன்ற ஆசிரியர் பிராவிடண்டு பண்டுக்கு நிர்வாகி கட்டும் தொகை, பள்ளி பியூன் சம்பளம், மாணவர் சுற்றுப் பிரயாணச் செலவு முதலிய அயிட்டங்களைத் தள்ளி விடுவதும் எவ்வளவு பொருத்தமற்றது.

ஆதலால் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகளுக்கு இருந்து வரும் மனச் சோர்வும் அதிருப்தியும் நீக்கி, ஆரம்பக் கல்வியை விருத்தி செய்ய,

தற்சமயம் கொடுக்கப்பட்டு வரும் 10% நிர்வாகக் கிராண்டை, விலைவாசி உச்சநிலை அடைந்திருக்கும் காரணத்தால் 25% ஆக உயர்த்த வேண்டுமென்றும்,

பள்ளி வரவு செலவுக் கணக்குத் தணிக்கையில், அரசினர் G. O. M. S. 2038, dated 6-6-62 உத்தரவில் கொடுக்கப்பட்டி

ருக்கும் ஒப்புக்கொள்ளக்கூடிய 12 செலவு அயிட்டங்களுடன் கீழ்க்கண்ட அவசியமான செலவு அயிட்டங்களேயும்,

1. பள்ளி பியூன் சம்பளம்
2. T. P. F. நிர்வாகி கட்டணம்
3. பள்ளி சுற்றுப் பிரயாணச் செலவு
4. பெற்ரேர், சுதந்திர தினம் முதலிய விழாச் செலவு
5. புது பெஞ்சு நாற்காலி
6. பெஞ்சு, நாற்காலி ரிப்பேர் செலவு
7. தண்ணீர், எலக்டிரிக் லைட் தீர்வைகள்
8. தலைமை ஆசிரியர் அலவன்ஸ்
9. ஏழை மாணவர் இலவச புஸ்தகம் சிலேட்டு செலவு

இச் செலவு அயிட்டங்களையும் டை G. O. M. S. 2038 உத்தரவில் சேர்த்துக்கொள்ள வேண்டு மென்றும், இச் சங்கம் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

**IV. பஞ்சாயத்து யூனியனும் தனியார் பள்ளிகளும் :** பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள்ளிருக்கும் தனியார் பள்ளிகளில் புதிய வகுப்புகள் திறக்கவோ, ஆசிரியர் நியமனம் செய்யவோ, கூடுதல் வகுப்புப் பிரிவு ஏற்படுத்தவோ கல்வி அதிகாரிகளின் அனுமதியோடு, பஞ்சாயத்து யூனியன் ஒப்புதலும் வாங்க வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு இருக்கிறது. இவ்வுத்தரவு ஒரே காரியத்தைச் செய்வதற்கு இரு அலுவலகங்களும், இரட்டிப்புச் செலவும், இரு அலுவலக உத்தியோகஸ்தர்களுக்குள் அபிப்பிராய பேதமும் வீண்கால தாமதமும் உண்டுபண்ணுகிறது.

ஆதலால் இவ்விரட்டையாட்சியைத் தவிர்த்துக் கல்வி அதிகாரிகளின் அனுமதியே போதுமானது என்று உத்தரவு பிறப்பிக்க இச்சங்கம் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

# ஆரம்பக் கல்வி—ஆரம்பப் பள்ளிகளில் பள்ளி உணவு வழங்கத்தக்க மாணவர்களின் எண்ணிக்கை வரையறை —மறு ஆய்வு

---

Elementary Education—Scheme for Supply of School meals to pupils in Elementary Schools—Restriction on number of pupils to be fed—Revised Orders issued. G. O. Ms. No. 3116, Education, Dated 31st December, 1962.

கல்வித் துறையின் 1962-ம் ௵ ஆகஸ்டு ௴ 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2135-ல், ஆரம்பப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவளிக்கத்தக்க மாணவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதி—நகர மன்றப் பகுதி—மாநகராட்சிப் பகுதியிலும் I முதல் V-வது வகுப்பு வரை படிக்கும் மாணவரின் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் என்ற வரையறைக்கு மேற்படக் கூடாது என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்திருந்தது. இந்த ஆணைகளைத் திருத்துகின்ற முறையில், நீலகிரி தவிர ஏனைய ரெவினியூ மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள ஆரம்பப் பள்ளிகளில், I முதல் VIII-வது வகுப்பு (standards) வரையில் படிக்கும் மாணவர்களின் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உணவளிக்கப்படலாம் என்று அரசாங்கம் இப்போது ஆணை பிறப்பிக்கிறது. நீலகிரி மாவட்டத்தில், I முதல் VIII-வது வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் மொத்தத் தொகையில் பாதிக்கு மேற்படாத அளவினருக்கு இத்திட்டத்தின் கீழ் உணவு அளிக்கப்பட வேண்டும். மதிய உணவுத் திட்டத்துக்காக அரசாங்கத்துக்காகும் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த வரையறைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

தேவைப்பட்டால் குறிப்பிட்ட வரையறைக்கு மேலும் மாணவர்களுக்கு மதிய உணவளிக்கலாம். ஆனால் வரையறைக்கு மேல் அதிகமாக அளிக்கப்படும் தொகையினருக்கு உணவளிக்க ஆகும் செலவுகள், உள்ளூர் நன்கொடைகள் வசூலித்துச் செய்யப்பட வேண்டுமே தவிர அரசாங்கத்தாரிடமிருந்து எந்த ஒரு உதவித் தொகையும் எதிர்பார்க்கக்கூடாது. மதிய உணவை எதிர்பார்க்கும் மாணவரின் தொகையைக் குறைக்கவேண்டிய தேவையில்லை.

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் : இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 5 | 0 | 10 | 28–5–'58 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 6 | 0 | 5 | 28–5–'58 |
| மூன்றும் வகுப்பு | 0 | 8 | 0 | 5 | 28–5–'58 |
| நான்காம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13–5–'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 0 | 0 | 13 | 18–5–'60 |

## சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 | 8 | 0 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0 | 12 | 0 | 43 | 13–5–'59 |
| நான்காம் வகுப்பு | 0 | 14 | 0 | 25 | 13–5–'59 |

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 1 | 4 | 0 | 39 | 18–5–'60 |

## சிறுவர் சமூக நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 | 10 | 0 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0 | 12 | 0 | ... | ... |

ஆசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நான்காம் வகுப்பு (மாவட்ட வாரியாக) | 1 | 14 | 0 | 44-46 | 13–5–'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 12 | 0 | 43 | 18–5–'60 |

## சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B. A., L. T.

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 1 4 0 | 26 | 18-5-'60 |

## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : பி. வீரராகவன்

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 6 0 | ... | ... |
| மூன்றாம் வகுப்பு | 0 7 0 | ... | ... |

ஆசிரியர் : M. விவேகானந்தா, B. Sc., L. T.

| | | | |
|---|---|---|---|
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 30 | 13-5-'59 |

துணைப் பாட புத்தகங்கள்

## சிறுவர் அறிவுக் கதைகள்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 15 | 18-5-'60 |

## நீதிக் கதைகள்

ஆசிரியர் : வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 17 | 18-5-'60 |

Venkatesan Press, Madras-1.

CONNEMARA ... 21 NOV 196..